விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே


சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 27 வியாழக்கிழமை (09.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

# அடையாளம் காட்டினால் காணிகளை விடுவிப்போம்

## கேப்பாப்பிலவு குறித்து இராணுவத் தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப்படை அமைந்துள்ள பகுதியிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தமது காணிகளை சரியாக அடையாளம் காட்டுவார்களாயின் அதனை விடுவிக்க தம்மாலான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரட்ண தெரிவித்துள்ளார். (22-ம் பக்.)



## இளைஞர் மீது கத்திவெட்டு

(கரணவாய்)

புலோலி பகுதியில் தாக்குதலுக்கும் கத்திவெட்டுக் காயத்துக்கும் உள்ளான நிலையில் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 6-ம் திகதி திங்கட்கிழமை

24-ம் பக்கம் பார்க்க....

## வித்தியா படுகொலை: சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் பாலியல் வன்புணர்வின் பின்னரான படுகொலை தொடர்பான வழக்கானது நீதிமன்றின் முதற் பருவகாலத்திற்கு முன்பதாக யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என சட்டமா

22-ம் பக்கம் பார்க்க....

## ✷ காணி விடுவிப்பு பிரதமர் - த.தே.கூ இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கேப்பாப்பிலவு மக்களின் காணிகள் விடுவிப்பு மற்றும் வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இன்றைய தினம் பிரதமர் அலுவலகத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவி

22-ம் பக்கம் பார்க்க....

## காணாமல்போனோர் சட்டமூலம் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படும்!

### வெகுஜன ஊடக அமைச்சர் தகவல்



(கொழும்பு)

காணாமற்போனோர் சட்டமூலத்தை திருத்தங்களுக்கு உட்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாகவும் அதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் வெகுஜன ஊடக நாடாளுமன்ற மறுசீரமைப்பு

22-ம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு போராட்டத்துக்கு சிங்களவர்களும் ஆதரவு தெரிவிப்பு



22-ம் பக்கம் பார்க்க....

## கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கு சாட்சியை அச்சுறுத்திய நபர்களின் உருவப்படங்களை வரைய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பகுதியில் கர்ப்பிணி பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கின் முக்கிய கண்கண்ட சாட்சியாகவுள்ள மாற்றுத்திறனாளியான சிறுவனை அச்சுறுத்தியவர்களை அச்சிறுவனது உதவியுடன் அச்சுறுத்திய நபர்களது உருவப்படங்களை வரைந்து அவர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக சாட்சிகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பிறிதொரு வழக்கு தாக்கல் செய்யுமாறு ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பரிசோதகருக்கு ஊர்காவற்றுறை

24-ம் பக்கம் பார்க்க....

## வடக்கு முதலமைச்சரின் பங்கேற்புடன் கிழக்கில் நாளை "எழுக தமிழ்"

(மட்டக்களப்பு)

கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நாளை மட்டு. நகரில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.

இந்த எழுச்சிப் பேரணியில் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பங்கேற்கவுள்ளார்.



தமிழ்மக்கள் பேரவை ஏற்பாடு செய்துள்ள கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது வடக்கில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் நடந்தது போன்று மட்டு. நகரிலும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை பேரினவாத அரசாங்கங்களால் தொடர்ந்து தமிழினத்

22-ம் பக்கம் பார்க்க....

ஒலிம்பியா ஸ்போர்ட்ஸ்

இன்று முதல் (09.02.2017) புதிய காட்சியறையில் இயங்கும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்
இல.73, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 3460

## ஆட்டோ கோர விபத்து கர்ப்பிணிப் பெண் அருந்தப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். குளப்பிட்டி சந்தியில் இடம்பெற்ற கோர விபத்தில் முச்சக்கர வண்டி ஒன்று முற்றாக சேதமடைந்து உள்ளது. குறித்த விபத்தானது நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாக சென்று கொண்டிருந்த வான் ஒன்று குளப்பிட்டி சந்தியில் ஆனைக்கோட்டை பக்கமாக திரும்பியுள்ளது.

24-ம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விசாகன்



காரைதீவின் "கருங்காலி" - இவன்
கட்டிக் காத்தது "கிடுகுவேலி"

இந்துக் கல்லூரியின் மணி மகுடம் - இவன்
யாழ்ப்பாணப் பல்கலையின் நிறைகுடம்

சடையாளி வேலனின் பெயர் கூறும் பேரன்
கல்லடி வேலனின் "தங்கோடைச் சைவன்"

"அஞ்ஞானம் தன்னை அகல்வித்த" நல்லறிவு
விஞ்ஞானம் தன்னில் வியாபித்த பேரறிவு

அதிகம் அறியப்பட்டிராத அத்திபாரம்
ஆருக்கும் விலைபோகாத அருவேழம்

அறிவை ஆயுதமாக்கிய தேசியப் பிரளயம்
உலகை தனக்குள்ளடக்கிய தகவல் பெட்டகம்

அறிவின் ஆலயம், அன்பின் அடையாளம்
தமிழின் விலாசம் - தன்னிகரில்லாத மாமனிதம்

இங்கிதமான சிந்தனைக் குதம்
மங்காத குணம் - மகிழ்வான முகம்
அசைக்க முடியாத ஆளுமை - இவனொரு
தனியாள் தானை

ஆவணக் காப்பில் "கலைஞானியின்" வாரிசு
ஆகமொத்தத்தில் இவன் தாய்மொழியின் பரிசு.

உருண்டதும் - ஒன்றாக திரிந்ததும்
உலகை அளந்ததும் முடிந்ததா?

"கந்தனுக்கு" அவன் சொன்னது
"அரோகரா" நாம் சொன்னது
"கடம்பனுக்கு" அவன் சொன்னது
"அரோகரா" நாம் சொன்னது
இனி இதனை யார் சொல்வது?
நல்லூர்க் கந்தா பதிலைச் சொல்லு...

ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை காணாவிடில்
இருப்புக் கொள்ளாத "ஆதிரை" அப்பன் - இவன்
கொம்பு பிடித்து குரலை உயர்த்தினால்
நடேசர் ஆட்டம் நர்த்தனமாகும்

## அமரர்
## குமாரசாமி விசாகன்

**கணிப் பொறியாளர்**
**காரைநகர்**

"வேண்டத் தக்கதறிவோனே" - ஆண்டி கேணி ஐயனே
"சித்தம் சிவனொடு ஆட ஆடத்" திரிந்த
அருமருந்தை அழைத்தாயோ!

கணனி "error" களைந்த கனவானின் மரணம்
கடவுளின் "error"
நத்தாரில் பிறந்தவன் நீ - மீண்டும்
உயிர்த்தெழ மாட்டாயா ...???

(7886)

**நண்பர்கள்**
**2001 - முகாமைத்துவ, வணிக அணி**
**யாழ்.பல்கலைக்கழகம்**

# ‘13’ தடுக்கிறது

## அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

***அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளின் கீழுள்ள சில விடயங்களில் தன்னால் நேரடியாகத் தலையிட முடியாது என்றும் அதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.***

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில், நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணிக்கு கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது, சமிந்த விஜேசிறி ஊவா மாகாண சபை தொடர்பில் கேள்வியொன்றை எழுப்பியிருந்தார்.

ஊவா மாகாண சபையின தற்போதைய முதலமைச்சரினால் ஊவா மாகாண பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகப்பைகள் வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறெனின் இதனூடாக அனுகூலம் கிடைக்கப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை உள்ளிட்டவற்றை கேட்டிருந்தார். கேள்விகளுக்கு அமைச்சர் பைஸர் முஸ்தபா பதிலளித்து கொண்டிருந்தார். எனினும், பதிலில திருப்தி கொள்ளாத சமிந்த விஜேசிறி, பாடசாலை புத்தகப்பைகள் விவகாரத்தில் பாரிய முறைக்கேடுகள் இடம் பெற்றுள்ளன. ஆகையால், மாகாண சபையில் வினவி, பதிலளிக்குமாறு அமைச்சரிடம் கோரிநின்றார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் பைஸர் முஸ்தபா, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களே மத்திய அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன. எங்களால், நேரடியாக தலையிடமுடியாது. பிரதான செயலாளர் வழங்குகின்ற தரவுகளின் அடிப்படையிலேயே பதில் வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டங்களுக்கு இ.த.ஆ.சங்கம் முழுஆதரவு

குடியிருப்பு நிலங்கள் பறிக்கப்பட்ட நிலையில் வாழும் இடம் இல்லாமல் தமது நிலத்திற்காக பாடசாலை பிள்ளைகளுடன் வாழும் உரிமை கேட்டுப் போராடும் கேப்பாபுலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டதில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையாக பங்கேற்கின்றது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் விடுத்துள்ள ஊடகச் செய்தியில், காணாமல் ஆக்கப்பட்ட பெற்றோரின், சகோதரர்களின் குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. பாடசாலை செல்லும் குழந்தைகளில் பலர் தாய், தந்தையரை இழந்து அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலாக குடியிருப்பு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு நல்லாட்சி அரசிலும் விடிவு இன்றி பாடசாலை செல்லும் பிளைகள் உள்ள குடும்பங்கள் பல நடுத்தெருவில் நிற்கின்றன.

இத்தகைய நிலை தொடர்ந்தவண்ணம் உள்ளது. இதற்காக போராடும் மக்கள் எமது இரத்த உறவுகள் அவர்களின் துன்பங்களில் எமக்கு முழுமையான உரிமை உறவு இருக்கின்றது.

ஆகையால் கேப்பாபுலவு மக்களினதும், புதுக்குடியிருப்பு மக்களினதும் சொந்த நிலங்களை மீட்கும் அகிம்சைப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையாக இணைந்து கொள்கின்றது.

நாளை வெள்ளிக்கிழமை (10.02.2017) இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச் சங்க பிரதிநிதிகள் மற்றும் வடமாகாண பிரதிநிதிகள் இவர்களோடு முல்லைத்தீவு அதிபர்கள், ஆசிரியர் அனைவரையும் காலை.8.30 மணிக்கு குறித்த பிரதேசங்களில் நடைபெறும் போராட்டங்களில் இணைந்துகொள்ளுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளரும், முல்லைத்தீவு மாவட்டச் தலைவரும், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும் முல்லைத்தீவு கல்வி வலயச் செயலாளரும் அழைப்பு விடுத்துள்ளனர்.


அனைத்து அதிபர்களும், ஆசிரியர்களும் வெள்ளிக்கிழமை காலை தமது விடுமுறைக்கான அறிவித்தலை உரியவர்களிடம் தெரியப்படுத்தி போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-3)

# சைற்றம் கல்லூரி குறித்து இறுதி முடிவு 17ஆம் திகதி

மாலம்பே சைற்றம் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து இறுதி முடிவு எடுப்பதற்காக இலங்கை மருத்துவப் பேரவை எதிர்வரும் 17ஆம் திகதி கூடவுள்ளனர். சைற்றம் பல்கலைக்கழகம் தொடர்பில் அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேரந்த இரண்டு மாணவர்களினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட்மனுவை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அந்தப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவப் பட்டத்தை வழங்குவதற்கான அங்கீகாரம் இருப்பதாக உறுதிப்படுத்தியது.

எனினும் சைற்றம் பல்கலைக்கழகத்தை மருத்துவப் பல்கலைக்கழகமாக ஏற்றுக்கொள்ளாத இலங்கை மருத்துவப் பேரவை, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் அரச மருத்துவர்களின் சங்கம் ஆகியோர இந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்ய தீர்மானித்துள்ளனர். இந்த நிலையில் இது தொடர்பில் இறுதி முடிவொன்றை எடுப்பதற்காகவே எதிர்வரும் 17ஆம் திகதி கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (இ-3)

# கட்டுப்பாட்டு விலை கஷ்டம் யாழில் நேற்று கவனயீர்ப்பு!






கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்க முடியாதுள்ளமையை தெளிவுபடுத்தி யாழ்.மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டப முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையால் நடத்தப்பட்ட இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில், தற்போதுள்ள தமது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தும் வகையில் 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றினை யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் யாழ்.மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் எஸ்.மோகன் ஆகியோரிடம் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் காலத்துக்குக்காலம் அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் தொடர்பாக நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் அரச செயலகங்களுடன் இணைந்து நியாய விலைக்கு பொருட்களை விற்பனை செய்து வந்தது.

ஆனால் தற்போது அத்தியாவசிய பொருட்கள் தொடர்பான விலை நிர்ணயம் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது.

இதன் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விற்பனையை கூட்டுறவு சங்கங்கள் நிறுத்த வேண்டிய நெருக்கடியான நிலை தோன்றியுள்ளது.

இதன்மூலம் கறுப்பு சந்தை வலுப்படவும் அதனால் மக்கள் பெரிதும் பாதிப்படையும் நிலை உருவாகவுள்ளது. அத்துடன் நூற்றுக்கணக்கான கூட்டுறவு பணியாளர்களும் பதிப்படையும் அபாய நிலை ஏற்படும்.

எனவே கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யும் போது கால அவகாசம் வழங்க வேண்டும், கட்டுப்பாட்டு விலையில் அரசாங்கம் பொருட்களை இறக்குமதி செய்ய முன்வர வேண்டும். மேலும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமாக செய்பட வேண்டும், அத்துடன் நடைமுறைக்கு சாத்தியமானதும் மக்களுக்கு நன்மை செய்யக்கூடியதும் நியாயமானதுமான விலைக்கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றி பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் செயற்படுவதற்கு அரசிடம் இருந்து உரிய பதிலை பெற்றுத்தர வேண்டும்.

அத்துடன் சாதகமான பதில் கிடைக்காவிடின் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொள்வோம் எனவும் குறித்த மகஜரில் தெரிவித்துள்ளனர். (இ-9)

# ‘சித்தி’ இன்றேல் நியமனமில்லை



(கொழும்பு)

“சமுர்த்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக அண்மையில் நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் கிடைத்துள்ளன. நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டே உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படுவர், பரீட்சையில் சித்தியெய்தாத எவருக்கும் நியமனம் வழங்கப்படமாட்டாது” என்று, சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது, குறுக்கு கேள்வியை எழுப்பிய சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி, சமுர்த்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான பரீட்சை நிறைவடைந்துள்ளது. எனினும், ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கின்ற வடக்கைச் சேர்ந்த அரசியல்வாதிகள், இந்தப் பரீட்சையில் சித்தியெய்தாவிட்டால் பரவாயில்லை. உங்களுக்கு அரசியல் ரீதியில் இந்த நியமனத்தை பெற்றுத்தருகின்றோம் என சிலர் கூறிவருகின்றனர். அரசியல்வாதிகள் சிபாரிசு செய்தால், இந்த நியமனம் கிடைக்குமா? என வினவினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் எஸ்.பி., “பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிவிட்டன. நேர்முகப்பரீட்சை நடத்தப்படும். அதில், புள்ளிகள் எவையும் இடப்படமாட்டாது. வேலை செய்வதற்கான திறமை உள்ளிட்ட விவகாரங்களே பார்க்கப்படும். இந்தப் பரீட்சையில் சித்தியடையாத எவரும் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படமாட்டார்கள்” என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-3)

# பிரதியமைச்சர் ரஞ்சனுக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பு



தொலைபேசி ஊடாக மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மண் அகழ்விற்கு எதிராக போராடி வரும் நமக்கு பாநாள உலகக் குழுவினரைக் கொண்டு இந்த வர்த்தகர்கள் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரிடமும் முறைப்பாடு செய்துள்ளேன்.

எனினும் சட்டவிரோத மண் அகழ்விற்கு எதிரான போராட்டங்களை தாம் கைவிடப் போவதில்லை என அவர் தெரிவித்தார். (இ-3)

# சந்திரிகாவிடம் கூறுவதற்கு என்னிடம் நல்ல பதிலுள்ளது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தன்னைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து பதிலளிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாயின் தன்னிடம் அதற்குத் தேவையான நல்ல பதில்கள் உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் என்னைப் பற்றிக் கூறியுள்ளவற்றுக்கு நான் பதிலளிப்பேன். உடனடியாக பதிலளிக்குமாறு அவர் வேண்டுவாராயின் அதற்கும் நான் [illegible] உள்ளேன் எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.(இ-3)

**சாதாரண மற்றும் மாசடைந்த குடிநீரை நல்ல ருசியான MINERAL WATER ஆக்க**

- RO தொழில்நுட்பம் மற்றும் வேண்டிய MINERAL Adding தொழில்நுட்பம் மூலம் உங்கள் வீட்டு சாதாரண மற்றும் மாசடைந்த குடிநீரை நல்ல ருசியான MINERAL WATER ஆக்கி குடிப்பதற்கான Plant (தொகுதி) எங்களிடம் விற்பனைக்கு உண்டு.
- விலை ரூபா.32, 000இல் இருந்து (Capacity 200L / Day)



**தொடர்புகளுக்கு:-**
HIONE,
Research & Development Centre,
No.118 G.P.S Road,
Kalliyangkadu, Jaffna
Hotline:0718728738, 0754289926, 0771235646
Email:hionejaffna@gmail.com (7892)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# பிறந்த நாள் வாழ்த்து



## திருமதி கௌரி தவக்குமார்

கல்வியுலகின் கலங்கரை விளக்காய் திகழ்ந்து இன்று தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்று 09.02.2017 வியாழக்கிழமை தனது பிறந்தநாளைக் கொண்டாடும் திருமதி கௌரி தவக்குமார் அவர்களை மனதார வாழ்த்துவதுடன் சுகமாக வாழ்ந்து இறைவன் அருளைப் பெற இறைவனை வேண்டுகின்றோம்

**வாழ்த்துவோர்:**
01.சிவபாதசுந்தரம் குடும்பம்
02.சாந்தகுமார் குடும்பம்
03.பிரேமகுமார் குடும்பம்
04.சூரியகுமார் குடும்பம்
05.தேவகுமார் குடும்பம்
06.நந்தகோபாலன் குடும்பம்
07.சிவபாலன் குடும்பம்
08.சந்திரமலர் குடும்பம்
09.நடேசு (சிறி) குடும்பம்

கோணன் வேவில், வல்வெட்டி
T.P:.021 226 3301

(சி-7497)

# மாவட்ட செயலகம்-கிளிநொச்சி

## கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலைய மொத்த விற்பனை நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பம் கோரல்

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான விலையையும் வியாபாரிகளுக்கு போட்டிச்சந்தை வாய்ப்பு மற்றும் நுகர்வோருக்கு நியாயமான விலையையும் வழங்கும் நோக்குடன் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார நிலையத்தில் உள்ள மொத்த விற்பனைநிலையங்களை வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏ9 வீதிக்கு அண்மையில் கனகபுரம் பிரதான வீதியில் அமைந்துள்ள இப்பொருளாதார நிலையமானது பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. நாற்பது (40) கடைத்தொகுதி
2. வாகனத்தரிப்பிட வசதி
3. நீர், மலசலகூடம் மற்றும் மின்சாரம் ஆகிய அடிப்படை வசதிகள்

### பொதுவான முன் நிபந்தனைகள்

1. கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
2. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி பாதுகாப்பு பிணைப்பணமாக குறித்த வளாகமொன்றின் பன்னிரண்டு (12) மாத வாடகைக்குச் சமமான தொகையினை திருப்பிச் செலுத்தப்படாத தொகையாக செலுத்த வேண்டும் (அரச விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் இந்நிலையத்தின் கடை ஒவ்வொன்றிற்குமான மாத வாடகை தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகக்குறைந்த மாத வாடகை-Rs.3,500/-, ஆகக் கூடுதலான மாத வாடகை-Rs.5,500/-).

**கடைத்தொகுதியின் மாதிரி வரைபடம்**

| கடைத்தொகுதி | | கடைத்தொகுதி (மலசலகூடம்) |
|---|---|---|
| 20 | | 21 |
| 19 | | 22 |
| 18 | | 23 |
| 17 | | 24 |
| 16 | | 25 |
| 15 | ← → | 26 |
| 14 | | 27 |
| 13 | | 28 |
| 12 | வாகனத்தரிப்பிடம் | 29 |
| 11 | (உற்பத்திப்பொருட்களை | 30 |
| 10 | ஏற்றி இறக்கும் பகுதி) | 31 |
| 9 | | 32 |
| 8 | | 33 |
| 7 | | 34 |
| 6 | | 35 |
| 5 | | 36 |
| 4 | | 37 |
| 3 | | 38 |
| 2 | | 39 |
| 1 | நுழைவாயில் | 40 |

← கனகபுரம் வீதி →

**மாதிரி விண்ணப்ப படிவம்**

விசேட பொருளாதார மத்திய நிலையம்-கிளிநொச்சி வியாபாரத்திற்கு பொருத்தமான இடங்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர்: ...............
2. நிரந்தர முகவரி: ...............
3. தேசிய அடையாள அட்டை இல: .........
4. தொலைபேசி இல: ...............
5. தற்போது மேற்கொள்ளும் வியாபாரம் ஏதும் இருப்பின் அது தொடர்பான விபரங்கள்: ...................................
6. பொருளாதார நிலையத்தில் வியாபாரம் செய்வதற்கு எதிர்பார்க்கும் பொருள்: ..........
7. பாதுகாப்பு பிணைப்பணத்தை செலுத்த சம்மதிக்கின்றேன் /சம்மதிக்கவில்லை

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..................... .....................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 27.02.2017ஆம் திகதிக்கு முன்னதாக அரசாங்க அதிபர்-மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிளிநொச்சி பொருளாதார நிலைய மொத்த விற்பனை நிலையத்திற்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிடப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தை அடிப்படையாகக் கொண்டு நேர்முகத்தேர்வின் மூலம் விண்ணப்பதாரிகளின் வியாபாரத் தகுநிலை ஆராயப்பட்டே வியாபார நிலையம் வழங்கப்படும்

கிராமிய பொருளாதார விவகார அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் உள்ள இந்நிலையமானது இதற்கென நியமிக்கப்பட்ட முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்புச்சபையின் ஊடாகவே நிர்வகிக்கப்படவுள்ளது. எனவே, அதன் தலைவர் என்றவகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கே விண்ணப்பதாரியை தெரிவுசெய்யும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உரித்தாகும்.

மேலதிக விபரங்களுக்கு 0212285760 என்ற இலக்கத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பிரிவைத் தொடர்புகொள்ள முடியும்.

**சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
கிளிநொச்சி. மாவட்டம்

(சி-7499)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


திருமதி கு.விக்னராஜா


திருமதி த.சுரேஸ்குமார்


திரு.செ.ஜெயகாந்தன்


திருமதி வ.தர்மராஜா


திருமதி மி.விஜயரட்ணம்

(7887)

2017.01.31ஆம் திகதி கொழும்பு BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
"கல்விமாணிப் பட்டம்"
பெற்ற எமது உப அதிபர், ஆசிரியர்களை மனதார பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

# பொறுப்பேற்கப்படாதுள்ள வாகன இலக்கத்தகடுகள்

யாழ்.மாவட்ட செயலகத்தின் மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாகன இலக்கத்தகடுகள் இன்றுவரை உரிமையாளர்களால் பொறுப்பேற்கப்படாமலுள்ளன.

இவ்வாறு நீண்ட காலமாக உரிமையாளர்களால் பொறுப்பேற்கப்படாதுள்ள வாகன இலக்கத்தகடுகளில் 2016.03.31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகள் யாவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்துக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளன.

எனவே வாகன இலக்கத்தகட்டிற்கு விண்ணப்பித்து இதுவரை குறித்த வாகன இலக்கத்தகட்டினை பெற்றுக்கொள்ளாத வாகன உரிமையாளர்கள் 2017.03.31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தமது வாகனங்களின் இலக்கத்தகடுகளை பெற்றுக்கொள்ளுமாறும் திருப்பி அனுப்பப்படவுள்ள வாகன இலக்கத்தகடுகளின் பட்டியலை யாழ். மாவட்ட செயலக மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும் எனவும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் பரந்தாமன் அறிவித்துள்ளார். (இ)

# சைற்றம் அதிகாரி மீதான தாக்குதல் அறிக்கை இவ்வாரம் சபைக்கு வரும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

மாலபே சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரியின் பிரதான நிறைவேற்று அதிகாரி சமீர சேனாரட்ன மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூடு தொடர்பில் பொலிஸார் தறபொழுது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், இது தொடர்பான விசாரணை அறிக்கையொன்றை ஒரு வாரத்துக்குள் தனக்குப் பெற்றுத் தருமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் இதனை ஒப்படைத்ததும் இவ்வாரத்துக்குள் தான் பாராளுமன்றத்தில் அதனை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் பிரதமர் நேற்று முன்தினம் அறிவித்தல் விடுத்தார்.

இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயகக முறையான விசாரணை மேற கொள்ளப்பட வேண்டும் எனவும் அது தொடர்பில் சபைக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார். (இ-3)




# சீனாவுடனான உறவுகளை ஊக்குவிப்பதில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



பண்டைய கடல்சார் பட்டுப்பாதைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட அணை மற்றும் பாதை முயற்சியானது இலங்கை - சீன ஒத்துழைப்பில் புதிய சகாப்தம் ஒன்றைத் திறக்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சீன- இலங்கை இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு சீன ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவுடனான உறவுகளை ஊக்குவிப்பதில் இலங்கை உறுதியான அர்ப்பணிப்பைக் கொண்டிருக்கிறது. இரண்டு நாடுகளும் 60 ஆண்டுகளுக்கு முன்னர் இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்தன.

இந்த உறவு நிலையானதாக வளர்ச்சி பெற்று இப்போது மூலோபாய கூட்டாக உயர்ந்துள்ளது என்றும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-3)

# வருடாந்த ஒன்றுகூடலும் பரிசளிப்பும்

நெல்லியடி சனசமூக நிலையத்தில் நடத்தப்படும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் அனுசரணையில் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தில் பயன்பெற்று வரும் மாணவர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடலும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரிக் கலையரங்கில் இடம் பெறும். சனசமூக நிலையத் தலைவர் சி.கிருஷ்ணராஜா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி, யா/நெல்லியடி மத்திய கல்லூரி ஓய்வு நிலை அதிபர் கலாநிதி செ.சேதுராஜா, யா/நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் க. கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)


**வைத்தியம்**

குழந்தையின்மை, ஆண்மை குறைபாடுகள், முள்ளந் தண்டு நசிவுகள், மூட்டு வாதங்கள், சலரோகம், ஆஸ்துமா, உடல் பருமன் கூடுதல்/ குறைதல், தலைமுடி உதிர்தல், தழும்புகள், வயிற்று சுருக்கங்கள் மறைய, சகல நோய்களுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு.

தொடர்பு:- சான்ஸ் ஹெல்த் கெயர், 255, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.. (முன்பதிவு அவசியம்)
077 035 7307, 077 407 2058
(7824)

**Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புகள்**

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.

**கரவீணா இசை மன்றம்**

4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
T.P:-0777031293
(7870)


# இராசி பலன்

09.02.2017
(தை 27, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
திரயோதசி முற்பகல் 9.34 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 11.03 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
தைப்பூசம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம் | | சந் |
| சூரி புத | | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மிதுனம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** கடன் பிரச்சினைகளை சமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** கொடுத்த வாக்குகளை காப்பாற்றி மகிழ்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், உடல்நலன் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**மகரம்:** நிம்மதிக்காக ஆலயத்தினை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்களின் வருகையுண்டு, சுவாஸ்திர நன்மையுண்டு, தேவைகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**தனுசு:** மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், முதல் தான வாய்ப்புக்கள் இல்லம் வந்துசேரலாம், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், வருங்கால நலன் கருதி புதிய திட்டமொன்றை தீட்டுவீர்கள்.

# ஐ.நாவில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட சிபார்சுகளை நடைமுறைப்படுத்தவில்லை

## சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட சிபார்சுகளைக் கூட உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையினுடைய பொறிமுறைகளில் ஒன்றான பூகோள கால மீளாய்வில் உள்ளடக்கப்பட வேண்டிய சிபார்சுகளுக்கான தமது பரிந்துரையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையினுடைய பொறிமுறைகளில் ஒன்றான பூகோள கால மீளாய்வில் உள்ளடக்கப்படவேண்டிய சிபார்சுகளுக்கான பரிந்துரைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நா. இன்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் அடிப்படை பிரச்சினைகள், நில ஆக்கிரமிப்பு, அரசியற் கைதிகள் விடுவிக்கப்படாமை, காணாமற்போனோர் பிரச்சினை, தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகள் போன்ற மதச் சின்னங்கள் நிறுவப்படுதல், சிங்களக் குடியேற்றம், மீனவர் பிரச்சினை, பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொருளாதார பிரச்சினை, பயங்கரவாதத் தடைச் சட்டம், போதைப்பொருள் பாவனை, அச்சுறுத்தல், அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன் போது பல சிபார்சுகள் சமூகப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த ஜனவரி மாதம்-16 ஆம் திகதி தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற போது, பிராந்திய ரீதியான செயலமர்வுகளை நடத்திப் பிராந்திய ரீதியில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதெனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக யாழ். மாவட்டத்தில் குறித்த கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மக்கள் பொதுவாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? அதற்கு மக்களிடமிருக்கும் ஆலோசனைகள், தரவுகள், சிபார்சுகள் எனவும் ஆலோசிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடல் கடந்த 3 ஆம் திகதி மட்டக்களப்பிலும் 4 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றிலும், அதேநாளில் மாத்தறை மாவட்டத்திலும், 6 ஆம் திகதி மன்னாரிலும், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலும், காலியிலும், பதுளையிலும் ஒரே நாளில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

நேற்று திருகோணமலை மற்றும் மலையகத்தின் ஹற்றன் ஆகிய பகுதிகளிலும் இறுதியாக எதிர்வரும் 10 ஆம் திகதி நீர்கொழும்பில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

குறித்த இடங்களில் பல்வேறு மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் பெறப்படும் தரவுகளையும் மையப்படுத்தி சிவில் அமைப்புக்களுடைய உடன்பாட்டைப் பெற்றுக் கொண்டு இறுதியான கலந்துரையாடல் மூலம் கொழும்பில் நடத்தப்படும் நிகழ்வொன்றில் வைத்து இறுதி அறிக்கை வெளியீடு செய்யப்படவுள்ளதுடன், ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

யாழில் நடந்த இந்த நிகழ்வில் கலந்து கொண்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமைகளை மேம் படுத்துவதற்காக எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என அறிவதற்காக அந்தந்த அரசாங்கங்களிடமிருந்து பூகோள கால மீளாய்வு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளும்.

அத்துடன் சிவில் அமைப்புக்களிடமிருந்தும், ஐக்கிய நாடுகள் சபையின் இணை அமைப்புக்களிலிருந்தும் நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பாக அறிக்கையைக் கோரும்.

இந்த இரண்டு அறிக்கைகளையும் ஒப்பீட்டுப் பார்த்து ஒவ்வொரு அரசுகளினதும உண்மையான நிலைமையை ஆராய்ந்து அனைத்து நாடுகளிலும் மனித உரிமைகளை மேமபடுத்துவதற்காக அரசாங்கங்களுக்குச் சில சிபார்சுகளை மேற் கொள்ளும்.

கடந்த 2012 ஆம் ஆண்டு எங்கள் நாட்டு அரசாங்கமொரு அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது. சிவில் அமைப்புக்களும் சில காரணிகளை முன்வைத்து அறிக்கைகளை முன்வைத்திருந்தது. அந்த அறிக்கையில் 164 சிபார்சுகளை இலங்கை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருந்தது.

அதில் இலங்கை அரசாங்கம் 64 முக்கியமான சிபார்சுகளை மாத்திரமே ஏற்றுக் கொண்டது. இந்த வருடம் ஏற்கனவே இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட சிபார்சுகளை நடை முறைப்படுத்தியிருக்கிறதா? இல் லையா? எனபது தொடர்பாகவும் தற்போது இலங்கையிலுள்ள மனித உரிமைகளின் நிலையென்ன?, அதனை மேம்படுத்துவதற்கு எவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது போன்ற விடயங்களையும் உள்ளடக்கி இந்த வருடம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அரசாங்க ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சில சிவில் அமைப்புக்கள் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தைத் தாம் கஷ்டப்படுத் தத் தேவையில்லை என ஒதுங்கிக் கொண்டனர்.

ஆனால், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமாகிய நாங்கள் வேறு பல முக்கியமான அமைப் புக்களையும் இணைத்துக் கொண்டு இந்த வருட அறிக்கையைத் தயாரிப்பதற்கு முனைந்துள்ளோம். இந்த முயற்சியை ஊக்குவிப்பதற்காகப் பல சட்டத்தரணிகள் எம்முடன் இணைந்துள்ளனர் என தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தென்னிலங்கையைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான ருக்கி பெர்னாண்டோ, புஸ்பகுமார, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-9)



யாழ்.கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் பாடசாலை அதிபர் க. நித்தியானந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.க ஜதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், மக்கள் வங்கி சுன்னாகக் கிளை பிரதி முகாமையாளர் திருமதி புசாலினி தியாகராஜா (பழைய மாணவி) ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் பரிசில்களையும் வழங்கி கௌரவித்தனர்.

## 'தங்கரதம்' வெள்ளோட்ட விழாவும் 'ஸ்ரீ காமாட்சி கவசம்' நூல் வெளியீடும்

யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) தேவஸ்தானத்தில் இன்றைய தைப்பூச நன்னாளில் காலை 9 மணிக்கு அம்பாள் உள் வீதி வலம் வருவதற்காக உருவாக்கப் பெற்ற புதிய 'தங்கரதம்' வெள்ளோட்ட விழாவும் 'ஸ்ரீ காமாட்சி கவசம்' நூல் வெளியீடும் இடம்பெறும். (இ-12)

## இரு நூல்களின் வெளியீட்டு விழா

தி.செல்வமனோகரனின் இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை 10ஆம் திகதி காலை 9 மணிக்கு சைவ வித்தியா விருத்திச் சங்க உப தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் இடம்பெறும். (இ-12)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ் வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் (உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு முன்) இடம்பெறும். பாடசாலை அதிபர் ஜே. யூட்மரியரட்ணம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி ப.நந்தகுமார், கௌரவ விருந்தினராக வலிகாமம் உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பகல்வி) திருமதி றூபா உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

++++++++++

யா/ வட்டு. கார்த்திகேய வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுப்பஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறும். பாடசாலை அதிபர் ந. சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சு. தேவமனோகரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி ச.ம.யூ. பிரிட்ஜெச், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய உளவளத் துணையாளர் திருமதி ஸ்ரீ கோகிலாம்பிகை ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

++++++++++

யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் மற்றும் யாழ். சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர்களான இராமசாமி சிறிதரன், நவரத்தினம் ரவிவண்ணன் ஆகியோர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கோசலை குலபாலசிங்கம், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர் சங்க கணக்காய்வாளர் லோகராசா அருள்மதன், பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர் பஞ்சலிங்கம் ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-12)

++++++++++

(கரணவாய்)

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 11ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறும்.

பாடசாலை அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளரும் பழைய மாணவருமான சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி புஸ்டகுமாரி புஸ்பலிங்கம் வழங்குவார். (இ-3-60)

## இரண்டாவது அமர்வு நாளை

புதிய ஜனநாயக மாக்சிக-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் இரண்டாவது அமர்வு ஒக்டோபர் புரட்சியும் தொழிலாளி வர்க்க விடுதலையும் என்ற தலைப்பில் நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப3.30 மணிக்கு இல.62 கே.கே. எஸ்.வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (இ-3)

# அன்னையென அனுதினமும் அடியார் போற்றும் நயினை ஸ்ரீ நாகபூஷணி; இன்று தைப்பூசவிழா



''வாருங்கள் எல்லோரும்
வாழ்த்துவோம் அம்பிகையை
சேருங்கள்ஒன்றாய்நயினையில்
தைப்பூச விழாக்காண''

திருவருள் மிக்க அருட் சக்தியாகிய நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்மன் அடியார்களுக்கு வேண்டிய அனுக்கிரகங்களை வழங்கிக் கொண்டிருக்கிறாள் என்பது உலகறிந்த உண்மை. பயபக்தியோடும் உளவிருப்போடும் அன்போடும் ''மணிபல்லவம்'' எனப்படும் நயினையம் பதிக்கு யாத்திரை செய்யும் மக்கள் தொகை நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டே வருகின்றதென்பது சர்வமத சந்நிதி நாகபூஷணியின் பேரருட் பிரவாகமே எனலாம். கண்ணுக்கு முன்னே காட்டியும் கனவிலே காண்பித்தும் நிகழ்த்துகின்ற அற்புதங்களைக் கண்டு அருளமுதைப் பெற்றுக் கொள்வதற்காக நயினையம்பதியில் அடியார்கள் பெருமளவில் கூடுகின்றனர்.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வொத வல்லியாக, விரும்பித் தொழும் அடியார்கள் விழிநீர் மல்கி விதந்து போற்றித் துதிக்கத் தக்கவளாக நாடிவரும் அடியார்களின் வினைகளையெல்லாம் தீர்ப்பவளாக வருந்தி வரும் அடியவர்க்கு வேண்டத்தக்க அறிந்து வேண்டுவதும் கொடுப்பவளாக, ஆசைக் கடலில் அகப்பட்டு அலைவோருக்கு வாசக் கமலங்களை தலைமேல் வைத்து அருள் நேசக் கரங்களை நீட்டி நிம்மதி தருபவளாக அன்னை நாகபூஷணி நயினையில் வீற்றிருந்து அருள்மழைபொழிகிறாள். அம்பிகையின் கடைக்கண் பார்வை எல்லாவற்றையும் தரும் என அபிராமிப் பட்டர் அம்பிகையின் திருவுருவத்தின் மீது மனதைப் பறிகொடுத்து தம்மை மறந்து பாடிய பாடல்ஒன்றினை இங்கு தருவதால் அடியார்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

''தனம் தரும் கல்வி தரும்
ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும்
நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும்
அன்டர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே''

காலாதி காலமாக அன்னையாம் நாகபூஷணி நிகழ்த்தி வருகின்ற திருவிளையாடல்கள் ஒன்றா! இரண்டா எடுத்துச் சொல்ல. எண்ணுக் கணக்கற்றவை. நயினை அன்னை நாகேஸ்வரி எடுத்துரைக்க முடியாதளவுக்கு பல்வேறு அற்புதங்களைப் புரிந்த வண்ணம் நயினையில் அருளாட்சி செய்கின்றாள். நெடுங்காலம்பிள்ளைப் பாக்கியம் இல்லாதிருந்த தம்பதியர் பலர் அன்னையின் அருளால் நன்மக்கட்பேறு வாய்க்கப்பெறுவது, தீராத பிணிகளைப் போக்குவது போன்ற அற்புதங்கள் அளவிட முடியாததாகும். நித்திய அன்னதானம் ஆலயத்திலும் உயர்திருவிழாக்காலம் தைப்பூசம் , ஆடிப்பூரம் போன்ற விசேட உற்சவ காலங்களில் அமுதசுரபியிலும் நிகழ்கின்றது. நாகவழிபாட்டுத் தொன்மையுடையதும் மணிபல்லவம் என்பதும் நயினாதீவு என்பதற்கான சான்றுகளும் மூலாதாரங்களும் வரலாறுகளும் நிரூபித்து நிற்கின்றன. ''அமுதசுரபி'' பற்றிய தொன்மையும் அமுதசுரபி பற்றிய சரித்திர வரலாறுகளும் பொருந்தியமைவதால் இன்று அன்னதானம் நிகழும் பீடமாகவும் நயினாதீவு இலங்கி வருகின்றது. அள்ள அள்ளக் குறையாது அமுது சுரக்கும்தெய்வீகத் தன்மை வாய்ந்த அமுதசுரபி பற்றி''மணிமேகலை''யில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபுத்திரன் அமுதசுரபியை ''கோமுகி'' ப் பொய்கையில் விட்டதற்கமைவாக இன்று அமுதசுரபி அன்னதான சபையினர் அமுதசுரபி இல்லம் அமைத்து பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுதளிக்கும் பெருந்தொண்டைச் செய்து வருகின்றார்கள்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் தனிப் பெருங் கருணைகளிலொன்று அம்பாள் நாகமாகவே காட்சியளிக்கும் பூர்வீகம். அம்பாளின் கருவறையிலே மூலமூர்த்தியாக இன்றும் இருப்பவை ஐந்து தலை நாகப் பிரதிஷ்டையும் அம்மன் திருவுருவமுமாகும். இன்றும் உயிர்ப்புடன் தனது இருப்பையும் திருவருட் திறத்தினையும் உலகளாவிய முறையில் மெய்ப்பித்து அருளாட்சி புரிகின்றாள் அன்னை பராசக்தி. அம்பிகையின் திருத்தல வரலாறு வெகு இயற்கை வாய்ந்தது. நாகம் ஒன்று அம்பிகைக்குப் பூக்கொண்டு அனலை தீவில் இருந்து கடல் மார்க்கமாக நயினாதீவுக்கு வருகின்றபோது கருடனொன்று அதனை எதிர்த்து நிற்கின்றது. அவ்வழியாகச் சென்ற வணிகன் ஒருவன் பாம்பைக் காப்பாற்றினான் எனவும் கூறப்படுகின்றது. வீடு சென்ற வணிகன் துயில் கொண்டு எழுந்தபோது வீடு நிறைய நாகரத்தின மணிகள் இருந்ததாகவும் இச்செல்வம் கொண்டு வணிகனே இவ்வாலயத்தை கட்டுவித்தானெனவும் சரித்திர வரலாறுண்டு. மேற்படி கதைக்குச் சான்றாக வடகடலில் பாம்பு சுற்றிய கல், கருடன் கல் என கற்சாசனங்கள் இரண்டு இருக்கின்றன. நயினைத் திருத்தலத்தின் மேன்மையை இன்றும் எடுத்தியம்பியவாறு உள்ளன.

ஆண்டுதோறும் தைமாதம் பிறந்துவிட்டால் நயினையம்பதிநாகபூஷணியின் தைப்பூச நினைப்பு சைவ நன் மக்களுக்கு வந்துவிடும். தைமாதத்தில் தைப்பொங்கல், தை அமாவாசை, தைப்பூச உற்சவங்களைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். சைவ நன் மக்கள் தைப்பூச உற்சவம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வருடா வருடம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் உண்டு. தை மாதத்தில் பௌர்ணமியும் பூச நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாள் தைப்பூசமாகும். இப்பூசத் திருநாளில் முருகப் பெருமான் சிவசக்தியுடன் இணைந்து அருள் ஒளியில் பிரவேசிப்பார் என்பது புராண வரலாறாகும். இந்நாளில் நடராசப் பெருமானையும் சிவகாமியம்மையாரையும் முருகப் பெருமானையும் வழிபடுதல் சிறந்ததாகும்.

தைப்பூசத் திருநாள் சைவ நன்மக்களுக்கு ஒரு மங்களகரமான நாளாகப் போற்றப்பட்டு வருகின்றது. காது குத்துதல், சோறு ஊட்டல், ஏடு தொடக்குதல் போன்ற சுப காரியங்கள் அடியார்களால் ஆலயங்களில் நிறைவேற்றப்படும். குறிப் பாக இந்நாளில் புதுமனை புகுதல், பொன் உருக்குதல், புதுக்கணக்கு ஆரம்பித்தல், புதிர் எடுத்தல் போன்ற சுபகாரியங்களும் இடம்பெறும்.

அம்பிகையின் தைப்பூச விழா இன்று 09.02.2017 வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அம்பாளுக்கு மகா சங்காபிஷேகம், இலட்சார்ச்சனை, விசேட பூஜைகள், தீபாராதனைகள் இடம்பெறவுள்ளன. இவற்றினைக் கண்டு களித்து அன்னையின் நல்லருளைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பெருந்திரளான அடியார்கள் நயினைப் பதியில் கூடுவார்கள். உயர்திருவிழா மட்டுமல்லாது தைப்பூசம், ஆடிப்பூரம் போன்ற உற்சவ காலங்களில் அடியார்கள் பெருமளவில் கூடுவது சிறப்பம்சமாகும். வசந்த மண்டபத்தில் அம்பாள் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக வீற்றிருக்கின்ற அழகுக் காட்சியைக் காண்பதற்கு கண்கள் கோடி வேண்டும். நேரில்நயினையம்பதிக்கு வந்துஅம்பாளின்அருட் காட்சிகளைக் கண்டால்தான் அடியார்களின் துன்ப துயரங்களெல்லாம் நீங்கும். அம்பாள் ஆரோகணித்து, அடியார்கள் அருளாட்சி வேண்டி சூழ்ந்து வர அழகிய மஞ்சத்தில் எழுந்தருளி வீதியுலா வருகின்ற அழகுக் காட்சியும் இடம்பெறும்.

உலக அறங்களெல்லாவற்றுள்ளும் சிறந்தது பிறர் பசிபோக்குவதுதான். பசி போக்குவோரே சிறந்தவர். ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' தைப்பூச உற்சவத்திலன்று ''அமுதசுரபி'' அன்னதான சபையினரும் அன்னதானம் வழங்கவுள்ளார்கள். சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு மக்கள் எல்லோரும் நிம்மதியோடும் சகல நலன்களோடும் வாழ அருள் புரிய வேண்டி எல்லாம் வல்ல நயினைஸ்ரீநாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

''எனக்கென்றோர் தனிவரம்
யான் கேட்கவில்லை
என்னினத்தார் வாழ்வொ
ன்றே கருதவில்லை
உனக்கெல்லாவுயிர்களுமே
சொந்தமென்ற
உண்மையை நாளொரு
போதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்
குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே
வேண்டுகின்றேன்
தனக் கொருவ ரொப்பில்
லாத் தாயே இந்தத்
தாரணியில் சாந்தியையே
தருவாய் நீயே''

**நயினை.
நா.க.குமாரசூரியர்
(ஜே.பி)**


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:தனியார் தொழில்<br>தொ.இ: B/6895 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 60சூரிசெவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4178 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 34<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDAலண்டன் NOT PR<br>தொ.இ: B/6896 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 46 உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4183 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/6897 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 55 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/ முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4194 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc, MSc, QS/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/6898 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28சூரிசெவ் 2 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDA/ அரசதொழில்<br>தொ.இ: G/4199 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


# தீர்வின்றி தொடரும் 6 ஆவது நாள் போராட்டம்



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மையப் பகுதியில் பொதுமக்களின் காணிகளிலுள்ள இராணுவத்தை வெளியேறுமாறு வலியுறுத்தியும் கேப்பாபுலவு பிலவுக் குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக ஆறாவது நாளாக தொடரும் மக்கள் போராட்டம். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சமூக சீர்கேடுகளில் ஈடுபடுவோர் குறித்த தகவல்களை ஒரு வாரத்தில் சமர்ப்பிக்குக

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அறிவிப்பு





கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான மதுபான விற்பனை, போதைப் பொருள் பயன்பாடு ஆகியவற்றைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரும் பொருட்டு இது தொடர்பான சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு இவர்கள் தொடர்பான தகல்வல்களை ஒரு வார காலத்தினுள் சமர்ப்பிக்குமாறு கிளிநெச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநெச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி கூட்டத்தில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அத்தியட்சகர் கணேசநாதன், கிளிநெச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ராஜபக்ஷ, கிளிநெச்சி மாவட்டத்திலுள்ள ஏழு பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் பாதுகாப்பு குழுவின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். இக் கூட்டத்தில் தொடர்ந்து அராசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறுபட்ட சமூக பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் சட்டவிரோத மது உற்பத்தி,போதைப் பொருள் பயன்பாடாகும்.

இதனால் குடும்ப வன்முறைகளும் ஏற்படுவதுடன் சிறுவர், யுவதிகள் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

அதனை விட குடும்ப பொருளாதாரமும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றது.

எனவே நாங்கள் கூட்டங்களை கூடி தீர்மானங்களை எடுப்பதோடு நின்று விடாமல் அதனை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான மதுபானம் மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க அனைவரும் ஒத்துழைப்பு தரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்கள், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு பிரதிநிதிகள் , கிராம, பிரதேச, மாவட்ட மட்டங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தத்தமது கிராமத்தில் மேற்படி சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல்களை சேகரித்து அந்தந்த பிரதேச செயலர்கள் ஊடாக அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.தகவல்கள் வழங்குவோரின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-277)

# புதையல் தோண்டிய நால்வர் கைதாகினர்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா உளுக்குளம், அலியாப்பிட்டிய சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் புதையல் தோண்டிய 4 பேரை ஈரப்பெரிய குளம் பொலிஸார் கைது செய்துள் ளனஶ்ரீர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது (38,42,59, 44 வயதுடைய ஆண்கள்) கார் ஒன்றும், நிலத்தில் புதையல் கண்டு பிடிக்கும் ஸ்கானர் சாதனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள் ளது.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)

# வடக்கு வைத்தியர்கள் சைற்றத்திற்கு எதிராக நேற்றைய தினம் கவனயீர்ப்பு



வடக்கு மாகாண வைத்தியர்கள்.மருத்துவ பீட மாணவர்கள் ஒன்றிணைந்து நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் வவுனியா பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிலிருந்து பேரணியாக இலுப்பையடி, பசார் வீதி, வழியாக மத்திய பேருந்து நிலையம் சென்று புட்சிட்டிக்கு முன்பாக நின்று ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு மத்திய பேருந்து நிலையம் ஊடாக நீதிமன்றம் வீதிவழியாகச் சென்று வைத்தியசாலையை சென்றடைந்தனர்.

நேற்று நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னிட்டு வவுனியா பொது வைத்தியசாலைக்கு முன்பாக கறுப்பு கொடிகள் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் வைத்தியர்கள் தமது உடையில் கறுப்புப்பட்டி அணிந்து தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்ததுடன் "நீங்கள் பாதுகாப்பாக உள்ளீர்களா? போலி சைற்றம். வைத்தியர்கள் மிக விரைவில் வவுனியா வைத்தியசாலையில். வைத்தியசாலையின் இதயம் இலங்கை. மருத்துவக் கல்லூரியைக் காப்போம். போலிப்பட்டம் விற்கும் சைற்றத்தினை மூடு" போன்ற வாசகங்களை தாங்கியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பெருமளவான வைத்தியர்கள், மருத்துவ பீட மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# காணி மீட்புப் போராட்டத்தை தீர்வின்றி நிறுத்தப்போவதில்லை



முல்லை. அரச அதிபரிடம் பிலவுக் குடியிருப்பு மக்கள் திட்டவட்டம்

கேப்பாபுலவு பிலவுக்குடியிருப்பு கிராமத்திலுள்ள 84 குடும்பங்களுக்கு சொந்தமான 20 ஏக்கர் குடியிருப்புக் காணிகளையும் விவசாய நிலங்களையும் விடுவிக்குமாறு வலியுறுத்தி ஒன்பதாவது நாளாகவும் விமானப் படையின் முகாம் முன்பாக இடம்பெறும் போராட்டம் முடிவு இல்லையேல் நிறுத்தப்படாது என மக்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்

கடந்த 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இரவு பகலாக பிலவுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள விமானப் படை முகாமிற்கு முன்பாக பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 8.15 மணிக்கு மாணவர்கள் பாடசாலை செல்லாமை காரணமாக சம்பவ இடத்துக்கு முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சி.குணபாலன், முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது அவர்கள் காணிகள் விடுவிப்பதற்கான எங்களது நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் தீர்வு கிடைக்கும் வரை மாதிரிக் கிராமத்திலுள்ள வீட்டிலிருந்து பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வியை வழங்குமாறு கோரியபோது கேப்பாபுலவு பிலவுக்குடியிருப்பு கிராமத்திலுள்ள 84 குடும்பங்களுக்கு சொந்தமான 20 ஏக்கர் குடியிருப்புக் காணிகளையும் விவசாய நிலங்களையும் விடுவித்து நாம் அந்த காணிகளுக்கு செல்லும் வரை இப்போராட்டம் நிறுத்தப்படாது என மக்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து அவர்கள் மாணவர்களது கல்வியை இடைநிறுத்த வேண்டாமென கோரிசென்றனர். அடிப்படை வசதிகள் சிலவற்றை செய்து தருவதாகக் கூறிச்சென்றுள்ளனர். (2-281-310)

## பிலவுக்குடியிருப்பு மக்களின் 9 ஆவது நாள் போராட்டம்







கேப்பாப்புலவு- பிலவுக்குடியிருப்பு மக்கள் தமக்கு சொந்தமான 20 ஏக்கர் குடியிருப்பு காணிகளையும் விவசாய நிலங்களையும் விடுவிக்குமாறு வலியுறுத்தி விமானப்படை முகாமிற்கு முன்பாக கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் முன்னெடுத்துவரும் தொடர்போராட்டம் நேற்று ஒன்பதாவது நாளாகவும் தொடர்ந்தது. (படங்கள் :-பனிக்கன்குளம் செய்தியாளர்)

### வாக்குறுதிகளை அளிக்க தவறும் பட்சத்தில்

## அடுத்த வாரத்தில் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம்

### வவுனியா பல்கலைக்கழக ஊழியர் சங்கம் எச்சரிக்கை



வவுனியா பல்கலைக் கழக ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஒன்றிணைந்து நேற்று முனதினம் அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த வருடம் தொழிற்சங்க கூட்டு முயற்சியில் சம்மேளனங்களுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தை சரியான முறையில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படவில்லை. இந்நிலையில் இன்றைய நாளில் அகில இலங்கை ரீதியாக உள்ள பல்கலைக்கழகங்கள், கல்விசாரா ஊழியர்கள் இணைந்து ஒரு அடையாள வேலை நிறுத்தத்தினை மேற்கொணடு வருகின்றோம்.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் அரசாங்கம் தமது தவறுகளை உணர்ந்து எங்களுக்கு உரிய தீர்வினை தரவேணடும். ஏற்கனவே அவர்கள் வாக்குறுதி அளித்த வக்குறுதிகளை தவறவிட்ட காரணத்தினால் தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் தொடர்ச்சியான வாக்குறுதிகளை அளக்க தவறும் பட்சத்தில் எதிர் வரும் 15ஆம் திகதி தொடக்கம் நாங்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோமஎன்று அனைத்துதொழிற்சங்கங்களின் கூட்டு சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் பணிப புறக்கணிப்பை மேற்கொண்ட பல்கலைக் கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (2-250)

## அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறுவனத்தின் ஊடாக ஒழுங்குபடுத்தப்படும்

### சிவன்பவுண்டேசன் நிறுவன பணிப்பாளர் பிலவுக்குடியிருப்பு மக்களிடம் உறுதி



தமது காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாபுலவு - பிலவுக்குடியிருப்பிலுள்ளவிமானப் படைமுகாமிற்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொது மக்களை சிவன் பவுண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை 9.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியதுடன் போராட்டத்தில் ஈடுபட்டுவரும்மக்களின் அடிப்படைத் தேவைகளை தமது நிறுவனத்தின் ஊடாக இன்றைய தினம் ஒழுங்குபடுத்தித் தருவதாக உறுதியளித்ததுடன் குறித்த போராட்டத்திற்கு ஆதரவையும் வழங்கினார்கள்.

அந்த வகையில் இரண்டு தற்காலிக மலசல கூடங்கள் தண்ணீர்த்தாங்கி, படுக்கை விரிப்புகள், தறப்பாள்கள் நிலத்திற்கு பரவுவதற்கு தேவையான மணல் ஆகியவற்றை வழங்குவதாக தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதற்குதேவையானஉதவிகளை வழங்கி வைப்பதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார். (2-310-15)

வன்னி வலம்

## மன்னார் நகரசபையின் இவ்வாண்டுக்குரிய அபிவிருத்தி வேலைத்திட்ட கலந்துரையாடல்

### முதல்கட்டமாக பேருந்து நிலையத்தில் மின் விளக்குகள் பொருத்துதல்

மன்னார் நகரசபையின் நடப்பாண்டுக்குரிய அபிவிருத்திக் கலந்துரையாடல் மன்னார் நகரசபைச் செயலாளர் தலைமையில் நகரசபை மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இக்கலந்துரையாடலின் போது நடப்பாண்டுக்குரிய நகரசபையின் ஆலோசனைக் குழு சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக நிலையப் பிரதிநிதிகள் உட்பட நகர சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இவ்வருடத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய வேலைத திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இவ்வருடம் ADB மற்றும் JICA நிதித்திட்டத்தின் கீழ் 50 வீதிகளுக்கு கொங்கீறீட் மற்றும் காப்பெட் வீதிகள் அமைக்கப்படவுள்ளன . இது மக்களால் முன் வைக்கப்பட்ட முன்னுரிமையின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்ததுடன் ஏனைய அவசரமாக புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள் தொடர்பான விபரம் சமூக அமைப்புக்கள் மூலமாக முன்வைக்கும் பட்சத்தில் சபை நிதியூடாக இவ்வருடம் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த 2016, ஆம் ஆண்டு 10 நாட்கள் நடைபெற்ற பண்டிகைக்கால சந்தை நடவடிக்கை காரணமாக பொதுமக்களுக்கு சில இடங்களில் போக்குவரத்து செய்வதில் சில சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

ஆயினும் மக்களின் ஒத்துழைப்புடன் பெற்றுக் கொள்ளப்பட்ட 73 இலட்சத்து 88, ஆயிரத்து 637 ரூபா பணம் வரவாகக் கிடைத்துள்ளது.

இந்தப் பணத்தை பயன்படுத்தி இவ்வருடம் மேற்கொள்ளப்படவேண்டியவேலைத திட்டங்கள் தொடர்பாக நீங்கள் முடிவெடுத்து அறிவிக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள சபை தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு பண்டிகைக்கால சந்தை நடவடிக்கை மூலமாக பெறப்பட்ட வருமானத்தில் பொது விளையாட்டுமைதானம் புனரமைக்கப்பட்டதுடன்15, கிராமங்களில் 15, வீதிகள் திருத்தப்பட்டன என்பதையும் சுட்டிக் காட்டினார். இதனைச் சபை யோரும ஏற்றுக்கொண்டனர்.

மேலும்2016 ஆம்ஆண்டு மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக பொது அமைப்புக்களால் பல முன்மொழிவுகள் தெரிவிக்கப் பட்டன. இதில் 15. கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் முன்னுரிமை அடிப படையில் திட்டங்களை மேற்கொள்வது என ஒரு பகுதியினர் தெரிவிக்க பெரும்பாலானவர்கள் ஒரு தொகை பிரதான பாதைகள், விளையாட்டு மைதானம் போன்றவற்றிற்கு நவீன தெரு விளக்குகளை பொருத்தலாம் எனக் குறிப்பிட்டனர். அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத்துடன்மிகுதிபணத்தைப் பொதுப் பயன்பாட்டுத் திட்டத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.


அவற்றில் சேமக்காலைகள் புனரமைப்பு, முக்கிய வீதிகள் புனரமைப்பு போன்ற பணிகளுக்காக செலவிடுவது என சபையினால் எடுக்கப்பட்ட முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத்துடன் கிராமங்கள் தோறும் தேவையான தெரு விளக்குகள் தொடர்பாக கிராமிய சங்கங்கள் ஊடாக கோரிக்கையை முன்வைக்குமாறும் அடுத்தகட்டத்தில் மேலதிக தீர்மானங்களை ஆலோசனைக்குழு ஊடாக மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை தேவைகளையும் எனதும், எனது அலுவலகர்களுக்கும் தெரியப்படுத்துவதன் மூலமும கலந்தாலோசிப்பதன் ஊடாக நிறைவான அபிவிருத்தியை மேற்கொள்ளலாம். அதற்கு மக்கள் துணையாக இருக்க வேண்டும்.

எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய முதல் கட்டமாக மன்னார் நகரப் பகுதிக்குள் உள்ள பேருந்து நிலையத்தில் மின்விளக்குகள் பொருதும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (2-15)

## இனந்தெரியாத நபர்களினால் மூட்டப்பட்ட தீயில் வீடொன்று முற்றாக எரிந்து சாம்பல்



முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மூங்கிலாறு கிராமத்தில் இனந்தெரியாத நபர்களினால் வீடொன்றுக்கு வைகைகப்பட்ட தீயினால் வீடு முற்றாக எரிந்து சாம்பலான சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த 6 ஆம் திகதிதிங்கட்கிழமை இரவு நேரத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மூங்கிலாறு கிராமத்தில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் உறுப்பினர்கள் இரவு வேளைகளில் தமது வீட்டில் தங்காது வீட்டுக்கு அருகிலுள்ள உறவினர் வீட்டில் தங்கி வருவது வழமையாக இருந்துள்ளது.

இந் நிலையில் அன்றைய தினமும் இரவு வழமை போல அவர்கள் அயலவர் வீட்டுக்குச் சென்று தங்கியிருந்த நேரத்தில் இனந்தெரியாத நபர்களினால் குறித்த வீட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது வீட்டிலுள்ள அனைத்து பொருட்களும் முற்றாக தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் முறையிட்டதையடுத்து அவர் நேரில் சென்று நிலைமையை பார்வையிட்டு ஆறுதல் கூறியுள்ளார்.

மேலும் இவ்விடயம் தொடரபில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடொன்றை பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மேற் கொணடுள்ளனர்.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் சம்பவம் தொடர்பில் புலன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# ஜெயா மரணம் தொடர்பாக விசாரிக்க விசாரணை ஆணையம் அமைக்கப்படும் முதல்வர் ஓ.பி.எஸ். தகவல்

(சென்னை)

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான சந்தேகம் தொடர்பாக விசாரிப்பதற்கு விசாரணைஆணையம்அமைக்கப்படும் என முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



பதவி விலகிய முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் இரவு ஜெயலலிதாவின் சமாதியில் தியானம் செய்து பின்னர் அளித்த பேட்டி அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதவிர தற்போதைய தலைமை மீதுள்ள தனது அதிருப்தியை வெளிப் படுத்திய அவர் தன் மனதில் உள்ள விடயங்களில் நூறில் 10 சதவீதம்தான்வெளியே சொல்லி இருப்பதாக கூறினார். இந்த பேட்டியை அடுத்து அவர் கட்சிப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் ஓ.பன்னீர்செல்வம் நேற்று அவரது இல்லத்தில் மீண்டும் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது நிருபர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து அவர். ஜெயலலிதா கிட்டத்தட்ட 16 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தார்.

என்னை இரண்டு முறை முதலமைச்சர் ஆக்கினார். அவரது வழியில் தான் நானும் ஆட்சி நடத்தினேன். எப்போதும் அவர் வழியிலேயே செயற்படுகிறேன்.

ஜெயலலிதா மரணத்திலுள்ள சந்தேகங்கள் குறித்து விசாரிக்க வேண்டியது மாநில அரசின் கடமை. எனவே, விசாரணை ஆணையம் அமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கப்படும்.

வீ.கே. சசிகலா கட்சியின் தற்காலிக பொதுச் செயலாளராக உள்ளார். விரைவில் நிரந்தரப் பொதுச்செயலாளராக வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்யப்படவேண்டும்.

எனக்குப்பின்னால்பா.ஜ.க. உள்ளது என கூறுவது வடிகட்டிய பொய். பா.ஜ.க. என்னை இயக்குவதாகக் கூறுவதும் பொய் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# ஜெயலலிதாவுக்கு சசிகலா எழுதிய மன்னிப்புக் கடிதம்

## ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டார்

(சென்னை)

சென்னை போயஸ்கார்டனில் இருந்து வெளியேற்றப்பட்ட பிறகு ஜெயலலிதாவுக்கு சசிகலா ஒரு மன்னிப்பு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தை தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று நிருபர்களிடம் வெளியிட்டார்.

"என்னுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சிலர், நான் அக்காவுடன் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்ததை அடிப்படையாக வைத்து, எனது பெயரை தவறாகப் பயன்படுத்தி, சில விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டனர் என்பதையும், அதனால் கட்சிக்கு பாதிப்புகள் ஏற்படுத்தப்பட்டன என்பதையும், அவர்களின் தவறான நடவடிக்கைகளால் பல குழப்பங்கள் உணடாக்கப்பட்டன என்பதையும், கழகத்தின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கப்பட்டது என்பதையும். அக்காவுக்கே எதிரான சில சதித் திட்டங்களும் தீட்டப்பட்டன என்பதையும் அறிந்தபோது நான் பெரிதும் அதிர்ச்சியுற்றேன். மிகுந்த வேதனை அடைந்தேன்.

இவையெல்லாம் எனக்கு தெரியாமல் நடந்தவை என்பதுதான் உண்மை.

சந்தித்த நாள் முதல் இன்று வரை, அக்கா நன்றாக இருக்க வேண்டும் என்று தான் ஒவ்வொரு விநாடியும் நான் நினைத்திருக்கி றேனே தவிர கனவிலும் நான் அக்காவுக்குத் துரோகம் நினைத்ததில்லை.

என்னுடைய உறவினர்கள், நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டு அக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் செய்தது மன்னிக்க முடியாத துரோகம்.

அக்காவுக்கு துரோகம் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் எனக்கும் வேண்டாதவர்கள்தான்.

இவ்வாறு அக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவருக்குத் துரோகம் புரிந்தவர்களுடனான தொடர்புகளை நான் துண்டித்துவிட்டேன்.

அக்காவுக்கு துரோகம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், இனிமேல் அவர்களுடன் எனக்கு எவ்வித ஒட்டுமில்லை, உறவுமில்லை.

என்னைப்பொறுத்தவரை, அரசியலில் ஈடுபட வேண்டும் என்றோ, கட்சியில் பெரிய பொறுப்பு வகிக்கவேண்டும் என்றோ, சட்டமன்ற- நாடாளுமன்ற உறுப்பினர் ஆக வேண்டும் என்றோ, அமைச்சர் பதவியை அடைய வேணடும் என்றோ, ஆட்சியில் பங்கேற்க வேண்டும் என்றோ எனக்குத் துளியும் ஆசையில்லை.

பொதுவாழ்வில் பங்கு பெற வேண்டும் என்ற விருப்பமே எனக்கில்லை. அக்காவுக்கு



உண்மையான தங்கையாக இருக்கவேநான்விரும்புகிறேன்.

என் வாழ்க்கையை ஏற்கனவே அக்காவுக்கு அர்ப்பணித்து விட்டேன். இனியும், எனக்கென வாழாமல் அக்காவுக்காக என்னால் இயன்ற அளவுக்குப் பணி செய்து அக்காவுக்கு உதவியாக இருக்கவே நான் விரும்புகிறேன்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (இ-12)

# முதல்வர் ஓ.பி.எஸ். ஜெ. தீபா சந்திப்பு

தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா நேரில் சென்று சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் மெரினாவில் ஜெயலலிதா சமாதியில் மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஓ.பி.எஸ் கூறியதாவது, சசிகலா தரப்பு தன்னை மிரட்டி முதல்வர் பதவியை இராஜினாமா செய்ய வைத்ததாக குற்றம்சாட்டினார்.

இது தமிழக மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், நேற்று மீண்டும் செய்தியாளர்களை சந்தித்த பன்னீர்செல்வம், ஜெயலலிதா அண்ணன் மகள் ஜெ.தீபா மீது எனக்கு எப்போதும் மரியாதை உண்டு, இருவரும் இணைந்து செயற்பட வருமாறு தீபாவிற்கு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், ஜெ.தீபா முதல்வர் பன்னீர்செல்வத்தை அவரது இல்லத்திற்கு சென்று நேரில் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இருவரின் சந்திப்பிற்கு பின்னர் அதிரடி அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-12)




விளம்பர அனுசரணை (C-7502)

Phone Shop and Distibutors
Telesoon Phone Shop
No : 32 K.K.S. Road, Chunnakam. / Kaythadi Road, Urumpiray.
021 224 1552 0770453511
259c Power House Road, Jaffna. 021 221 7995
Phone, CCTV Camara வகைகளையும் அவற்றின் உதிரிப்பாகங்களையும் நேரடியாகவும் வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்து பெற்றுக்கொள்ளலாம்.

நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய் ஆகிய எண்ணெய் வகைகளை மிகவும் தரமாகவும் சுத்தமாகவும் ஊத்திக்கொடுக்கப்படும் இடம்
சாலினி எண்ணெய் ஊற்றும் மில்
இணுவில் மேற்கு, இணுவில். 021 224 07 37

# தைப்பூசமும் இணுவைக் கந்தனின் உலகப் பெருமஞ்சமும்



ஈழ மணித்திருநாட்டின் இயற்கை எழில் சூழ்ந்த இணுவில் கிராமத்தில் வரலாற்றுப் பழைமை வாய்ந்த இணுவில் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது.

இங்கே பன்னிரு கலங்களுடன் அருள் மழை பொழிகின்ற மிகவும் அழகுக் கோலத்தில் அமைந்துள்ள ஆறுமுகப் பெருமான் குடிகொண்டுள்ளார். இந்த ஆலயம் 6 ஆம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்றதாக வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

முன்னொரு பொழுது முருக பக்தரான வேலாயுதர் என்பவரது கனவிலே எம்பெருமான் தோன்றி "உனது வெற்றிலைத் தோட்டத்திலே நான் குடிகொள்ள உள்ளேன். அந்த இடத்திலே எனது இரு பாதங்களால் அடையாளம் இட்டுள்ளேன். அதில் என்னை வைத்து ஆதரிப்பாயாக" எனக் கூறி மறைந்தார்.

காலை அடியவர் தனது வெற்றிலைத் தோட்டத்திற்கு சென்றதும் தான் இரவு கனவில் கண்ட காட்சி நிஜமாக இருப்பதனைக் கண்டு ஆச்சரியமடைந்து அயலவர்களை அழைத்து அந்த இடத்தில் வேல் ஒன்றினை ஊன்றி ஒரு குடிசை அமைத்து வழிபடத் தொடங்கினார்.

அந்த குடிசையில் இருந்து தன்னை நாடி வருபவர்க்கெல்லாம் துன்பங்கள், நோய்களை நீக்கி அவர்களின் வேண்டுதல்கள் அனைத்தையும் நிறைவு செய்ததனால் உருவானதே நாம் இன்று காணும் ஆலயத்தின் தோற்றம் ஆகும்.

இவ் ஆலயத்தில் ஆனி மாதத்தில் 25 தினங்கள் மஹோற்சவமாகக் கொண்டு திருவிழா நடைபெறும். அத்துடன் கந்தசஷ்டி, கார்த்திகை, தைப்பூசம் ஆகிய விழாக்களும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

எல்லா ஆலயங்களிலும் தைப்பூசம் நடைபெறுகின்ற போதும் இலங்கையிலே இணுவில் கந்தசுவாமி கோவிலில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அதற்குக் காரணம் இங்கு அமைந்துள்ள உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்குதலாகும்.

இங்குள்ள பெரு மஞ்சம் தோன்றியதும் ஒரு அற்புத நிகழ்வே 18 ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த முருக பக்தரான பெரிய சந்நியாசியார் என்பவரது கனவிலே "எனக்கொரு மஞ்சம் அமைப்பாயாக" எனக் கூறி அதற்குரிய தோற்ற அமைப்புக்களையும் மனதிலே காட்டி மறைந்தார்.

இந்த அடியவர் மஞ்சம் செய்வது பற்றி முருகப் பெருமானை நித்தமும் தியானித்துக் கொண்டிருந்த போது "மஞ்சம் செய்வதற்கு சிற்பாச்சாரிமார் குறித்த நாளிலே காங்கேசன்துறைமுகத்தை வந்தடைவர். அழைத்து வந்து மஞ்சம் செய்" என திருவாய் மலர்ந்தார்.

மகிழ்வடைந்த பெரிய சந்நியாசியார் அக் குறித்த தினத்திலே அங்கே சென்றதும் ஒரு கூட்டத்தினர் அக் கடற்கரையில் நின்றனர். இவரைக் கண்டதும் தேடி வந்து "நீங்கள் தானே அன்று இந்தியாவில் வந்து எங்களை யாழ்ப்பாணத்திலுள்ள இணுவிலில் மஞ்சம் செய்ய அழைத்தது" என வினாவினர்.

சந்நியாசியார் தான் ஆலயத்தை விட்டு எங்கேயும் செல்லவில்லை. இது முருகப் பெருமான் தான் சந்நியாசியார் வடிவிலே அங்கே சென்று அழைத்ததை எல்லோரும் உணர்ந்து ஆனந்தக் கூத்தாடினர்.

அவர்களை அழைத்து வந்து உருவாக்கியதே இன்று நாம் காணும் உலகப் பெருமஞ்சமாகும்.

இம் மஞ்சத்தில் எத்தனையோ விதமான விபரிக்க முடியாத அளவு அழகிய நுட்ப வேலைப்பாடுகளை உடைய ஆயிரக்கணக்கான சிற்பங்களைக் கொண்டமைந்தது. அதன் தோற்றமும் பிரமாண்டமான அமைப்பும் பார்ப்போரை மெய் சிலிர்க்க வைப்பதுடன் தொழில்நுட்பம் இல்லாத பல நூற்றாண்டுகளுக்கு முன் இவ்வாறு செய்துள்ளார்களா? என அதிசயிக்க வைக்கும்.

பண்டைய காலத்தில் மஞ்சத் திருவிழாவைக் காண பல தேசங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் முதல் நாளே வந்து தங்கிக் குளங்களில் நீராடி பொங்கிப் படைத்து ஆடிப்பாடி வழிபட்டுச் சென்றார்கள் என எமது முன்னோர்கள் கூறுவார்கள். தற்பொழுது மிக நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் பல கிராமங்களைச் சேர்ந்த பக்தர்கள் ஒன்றாகக் கூடி பால்குடம் எடுத்து எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்தும் பொங்கிப் படையல் செய்தும் முருகன் புகழ்பாடி வழிபாடு செய்கின்றனர்.

இரவு மஞ்சத் திருவிழாவில் பாரம்பரிய கலை நிகழ்வுகளாக கரகம், கம்படி, சிலம்படி, தீப்பந்தம் சுற்றுதல், பொம்மலாட்டம் என்பனவும் மிகச் சிறப்பாக இடம்பெறுகின்றன.

இவ்வாறு மிகச் சிறப்பாக 9.02.2017 இன்று வியாழக்கிழமை மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

வாழ்நாளில் ஒருதடவையாவது தரிசிக்க வேண்டிய இம் மஞ்சத்தை இன்றைய தினம் வந்து தரிசித்து முருகப் பெருமானிடம் சகல செல்வங்களையும் பெற்று வாழ்வில் உயர்வடைவீர்களாக.

**ஆனந்தராசா ஜெயமோகனராஜ் இணுவில்.**



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்திய வருடாந்த திருவாசக விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கம்பர்மலை பெரிய தம்பிரான் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறி-2017/2019

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஊடாக நடத்தப்படுகின்ற இரண்டு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறி- 2017/2019 ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூன்றில் திறமைச் சித்தியும், மேலும் இரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு திறமைச் சித்திகள் இருத்தல்வேண்டும்) இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் ஆறு (06) பாடங்களுடன் க.பொ.த (சா/தர) ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இங்கு ஒரே தடவையில் மூன்று (3) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் வது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும் க.பொ.த (உ/தர) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மூன்று (3) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (இத் தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு தெரிவு செய்கையில் முன்னுரிமை வழங்கப்படும்.)

அல்லது க.பொ.த (உ/தர) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு (2) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 207.02.03 அரசவர்த்தமானியைப் பார்க்கவும்.

மேலும் மேற்குறித்த பாடநெறியினைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு அரச துறையில் உடனடி வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்ள கூடியதாக காணப்படுவதால் மேற்குறித்த கல்வித் தகைமையினைக் கொண்டுள்ளவர்கள் இவ் அரிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி பயன் பெறலாம் என வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் அறிவித்துள்ளார்.

(இ)

## நாள்தோறும் அப்பலோ சென்றேன்

# ஒருநாள் கூட அம்மாவை நான் பார்க்க முடியவில்லை

## பன்னீர்செல்வம் வேதனை

ஜெயலலிதா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த போது, 75 நாட்களும் வைத்தியசாலைக்கு சென்றதாகவும் ஆனால் ஒருநாள் கூட அவரை பார்க்க முடியவில்லை என்று தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வேதனை தெரிவித்துள்ளார்.

பரபரப்பான அரசியல் சூழலில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு முதல்வர் பன்னீர் செல்வம் பேட்டியளித்தார். அப்போது, ஜெயலலிதா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த போது, 75 நாட்களும் வைத்தியசாலைக்கு சென்றதாகவும் ஆனால் ஒருநாள் கூட அவரை பார்க்க முடியவில்லை என்றும் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது,

75 நாட்களும் அப்பலோ வைத்தியசாலைக்கு சென்றேன். ஒரு முறை கூட ஜெயலலிதாவை வைத்திய சாலையில் சந்திக்கவே இல்லை.

வேறு எந்த முக்கிய தலைவர்களும், மத்திய அமைச்சர்கள் யாரும் சந்தித்து பேசியதாக நான் கேள்விப்படவும் இல்லை, பார்க்கவும் இல்லை.

அவரை பார்க்க நான் பலமுறை முயற்சி செய்திருக்கிறேன். வைத்தியசாலையில் இருக்கும் அவரை பார்க்க முடியாத ஒரு துர்ப்பாக்கியசாலி என்று வருந்தி இருக்கிறேன். சந்தேகத்திற்கிடமான கேள்விகளை முன்வைக்க மனம் இடம் கொடுக்கவில்லை.

அம்மா இறந்துவிட்டதாக செய்தி கேள்விப்பட்டது முதல் எங்களுக்குள் இருந்த அனைத்து சக்திகளும் மறைந்து விட்டதாகவே நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை செய்வதே நன்றிக் கடனாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

பாரதச் செய்தி

## 100இல் பத்து வீதம் தான் வெளியே பேசியிருக்கிறேன்

### ஓ.பன்னீர்செல்வம் தெரிவிப்பு

மனதில் உள்ள விடயங்களில் 100இல் பத்து சதவிகிதம் தான் வெளியே பேசியிருக்கிறேன் என்று தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலாவிற்கு எதிராக கருத்துக்களை செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்திருந்து பரபரப்பை கிளப்பிய நிலையில், தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த போது,

கடந்த வாரங்களாக என் மனதில் தேக்கி வைத்திருந்த ஆதங்கத்தை இன்று வெளிப்படுத்தியுள்ளேன். சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை போன்ற பலரை பதவி கொடுத்து இந்த நிலைக்கு உயர்த்தியது அம்மாதான். எனவே, அவரது நினைவிடத்திற்கு சென்று அவரது ஆன்மா சாந்தி அடைவதற்கு பிரார்த்தனை செய்தேன்.

பழைய நிகழ்வுகள் மனதில் காட்சியாக விரிந்து மன அழுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. எனவே, அம்மாவின் நினைவில் பரிகாரம் தேட தான் சென்றேன். அப்போது, அம்மாவின் நினைவுகள் மட்டுமே என்னுடைய மனத்திரையில் ஓடியது. தியானத்தின் போது மனதில் தோன்றிய கருத்துக்களை நான் வெளிப்படுத்திட வேண்டியிருந்தது, கண் விழித்து பார்த்த போது பத்திரிகையாளர்கள் திரண்டு இருந்ததை நான் எதிர்பார்க்கவில்லை.

என் மனதில் உள்ள விடயங்களில் நூற்றில் 10 சதவீதம் தான் வெளியே சொல்லி இருக்கிறேன். நடந்ததை அனைவரிடமும் கூறினால் தான் ஆறுதல் கிடைக்கும் என்று நினைத்தேன். எனவே, பேட்டி கொடுக்க வேண்டிய கட்டாய சூழலுக்கு ஆக்கப்பட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)



## ஓ.பன்னீர்செல்வத்தை ஏன் நிர்ப்பந்தப்படுத்த வேண்டும்

### சசிகலா கேட்கிறார்



(சென்னை)

பன்னீர்செல்வத்தை யாரும் நிர்ப்பந்தப்படுத்தவில்லை என்றும் அ.தி.மு.க.வில் எந்த பிரச்சினையும் இல்லை என்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலா தெரிவித்துள்ளார்.

முதல்வர் பன்னீர்செல்வத்தின் பேட்டியை தொடர்ந்து அதற்கு பதிலளிக்கும் விதமாக பொதுச் செயலாளர் வீ.கே.சசிகலா போயஸ் கார்டன் இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

அதில் அவர் கூறியுள்ளதாவது,

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இருக்கிறார்கள். அதனால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. பன்னீர்செல்வத்துக்கு பின்னால் திமுக உள்ளது. 4 நாட்கள் நடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் எதிர்க்கட்சி தலைவரும், முதல்வரும் பார்த்து கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்தனர்.

நிர்ப்பந்தப்படுத்தினார்கள் என்று யாரோ சொல்லி அதனை கேட்டு சொல்கிறார். அன்று எங்கள் அருகில் தான் அவர் இருந்தார். நாங்கள் ஏன் அவரை நிர்ப்பந்தப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முன்னதாக அ.தி.மு.க.வின் பொருளாளர் பதவியில் இருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கி பொதுச் செயலாளர் சசிகலா நடவடிக்கை எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## பன்னீர்செல்வம் சொன்ன 10 விடயங்கள்



மெரினாவிலுள்ள மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில், முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அஞ்சலி செலுத்தினார். ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அமர்ந்த அவர் சுமார் 40 நிமிடங்களுக்கு மேல் மௌனமாக அமர்ந்திருந்தார்.

பன்னீர்செல்வம்,முதல்வர் பதவியை இராஜினாமா செய்து கடிதம் கொடுத்துள்ளார். அதே சமயம் ஆளுநர் வித்யாசாகர் ராவ் சென்னை திரும்பியதும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வீ.கே. சசிகலா முதல்வராக பதவியேற்க இருக்கும் இந்த நிலையில், ஓ.பன்னீர்செல்வத்தின் திடீர் தியானம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

40 நிமிட மௌனத்திற்கு பிறகு பன்னீர்செல்வம் சொன்ன முக்கியமான பத்து விடயங்கள்,

1)என்னை கட்டாயப்படுத்தி இராஜினாமா செய்ய வைத்தனர்.

2)கழகத்தின் கட்டுப்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதால இராஜினாமா செய்தேன.

3)மக்கள், தொண்டர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் இராஜினாமாவைத் திரும்ப பெறுவேன்.

4)மக்கள் நம்பிக்கையை பெற்ற ஒருவர் முதல்வராகவும் பொதுச் செயலாளராகவும் வர வேண்டும்.

5)முதலில் மதுசூதனனை பொதுச்செயலாளராக்க வேண்டும் என்று கூறினார்கள். நான் மறுத்தேன்.

6) பின்னர், சுகாதார துறை அமைச்சர் விஜயபாஸ்கர் என்னை சந்தித்து, சசிகலாவின் சகோதரர் திவாகரன் போன்றோர் சசிகலாவை பொதுச்செயலாளராக ஆக்க வேண்டும் என்று விரும்புவதாகக் கூறினார். நான் சசிகலாவிடம் இது பற்றிக் கேட்ட போது. அவர் அதை ஏற்றுக் கொண்டார்.

7)வர்தா புயல் நிவாரணப் பணி, ஜல்லிக்கட்டுப் போராட்டம் ஆகியவற்றை நான் சிறப்பாகக் கையாண்டது அவர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

8)பிரதமரை நான் சந்திக்கும் போது, துணை சபாநாயகர் தம்பிதுரையும் தனியாக எம்.பிக்களுடன் சென்று பிரதமரை சந்திக்க முயன்றார். இது பற்றி கட்சித் தலைமையிடம் சொன்ன போது நீதி கிடைக்கவில்லை.

9) நான் முதல்வராக இருக்கும் போது, என்னுடைய அமைச்சரவையில் அமைச்சராக இருக்கும் உதயகுமார் சசிகலா முதல்வராக வேண்டும் என்று சொன்னார். உதயகுமார் பேசியது நீதிக்கு புறம்பானது என்று சசிகலாவிடம் முறையிட்ட போது, உதயகுமாரை கண்டித்துவிட்டதாக சொன்னார்கள். ஆனால் பிறகு செல்லூர் ராஜூவும் என்னிடம் தனிப்பட்ட முறையில் உதயகுமாரை விமர்சித்துவிட்டு, மதுரை சென்று அவரும் சசிகலா முதல்வராகவேண்டும் என்று பேசினார்.

10)ஒட்டுமொத்த நாட்டு மக்களும், நம்மீது வருத்தத்தில் இருக்கிறார்கள். தொண்டர்களும் வருத்தத்தில் இருக்கிறார்கள், என்னை ஏன் அசிங்கப்படுத்துகிறார்கள், அவமானப் படுத்துகிறார்கள் என்று கேட்டேன். தன்னந்தனியாக நின்று போராடவும் தயாராக இருக்கிறேன் என்றார் பன்னீர் செல்வம். (இ-12)

# ஜெயலலிதா, ஓ.பி.எஸ். குறித்து அன்று கூறியது



சிலருக்கு ஒரு துறை யில் காலடி எடுத்து வைத்த உடன் அந்தத் துறையின் உச்சிக்கு செல்ல வேண்டும் என்று தோன்றும்.

ஆனால் ஓ.பி.எஸ் அப்படியல்ல. படிப்படியாக வளர்ந்தவர் என மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா பொதுக்கூட்டம் ஒன்றில் பாராட்டி பேசியுள்ளது தற் போது வெளியாகியுள் ளது.

பதவி பொறுப்பு என்பது காபி கலப்பது போன்று அத்துணை எளிதானதல்ல என பேச்சைத் துவங்கும் ஜெயலலிதா, ஓ.பி.எஸ். இன் துவக்க காலம், கட்சிக்கு அவர் ஆற்றிய பணி, பட்ட பாடுகள் என பட்டியலிட்டு பாராட்டியுள்ளார்.

தற்போதைய சூழலில் ஜெயலலிதாவின் அன்றைய உரை சசிகலா தரப்புக்கு தகுந்த பதிலாகவும் அமைந் துள்ளது. (இ-12)

# கைலாஸ் சத்யாத்திரியின் நோபல் விருது திருட்டு

நோபல் விருது பெற்ற இந்தியரான கைலாஸ் சத்யாத்திரியின் நோபல் விருதும் பதக்கமும் நேற்று முன்தினம் அவரது டில்லி இல்லத்தில் இருந்து திருட்டுப் போயுள்ளன.

சிறுவர் உரிமை,சிறுவர் கல்வி மற்றும் குழந்தை தொழிலாளி ஆகியவற்றுக் கான சமூகப் போராளியான இவருக்கு, 2014 ஆம் ஆண் டிற்கான சமாதான நோபல் விருது வழங்கப்பட்டிருந் தது.

டில்லி அலக்நந்தாவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த திருட்டில் அவரது நோபல் விருது திருடப்பட் டுள்ளது.

கைலாஸ் சத்யாத்திரியும் அவரது மனைவியும் அமெ ரிக்காவில் நடைபெறும் கூட் டம் ஒன்றில் பங்கேற்றிருக் கும் வேளையில் இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. (இ-12)



# அமெரிக்காவுடன் போருக்கு தயாராகி வருகின்றது சீனா

அமெரிக்காவுடனான போருக்கு500இற்கும்மேற்பட்ட போர்க் கப்பல்களைத் தயார் செய்யும் நிலையில் சீனா இறங்கியுள்ளதாக தகவல் கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின்45ஆவது ஜனாதிபதியாக பதவி ஏற் றுள்ள ட்ரம்ப் சீனா மீது போர் தொடுக்க கூடும் என்று தகவல கள் வெளியாகின. இதனால் சீனா அமெரிக்காவுடன் போரில ஈடுபடுவதற்கு தேவையான நடவடிக்கை களில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

அதன்படி ஆசிய பசுபிக் பகுதியில் நூற்றுக்கும் மேற் பட்ட போர்க்கப்பல்களை விரைவில் காணமுடியும் என்றும் அதில் விமான தாங்கி கப்பல்கள், நீர் முழ்கிக்கப்பல்கள் மற்றும் போருக்கு தேவையான அணுசக்தி கப்பல்கள் போன்ற வைகளும் இருக்கும் என்று கூறப்படுகிறது.

மேலும் சீனாவில் வலு வான பொருளாதாரம் உள்ளது. அதனால் பணவிவகாரத்தில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை என்பதால் ஒரு திறன்மிக்க ஆயுதப் படையை தயார் செய்வதில் சீனா உறுதி யாக உள்ளது என்று கூறப படுகிறது. கடந்த மூன்று வாரங் களில் மட்டும் புது வகையான இராணுவப் படைகளை சீனா தயாராக்கியுள்ளது.



அதுமட்டுமின்றி எதிர் வரும் 2050 ஆண்டிற்குள் பசுபிக்பகுதிகள் முழுவதையும் சீனா தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு முழு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகி யுள்ளது.

இதனால் இந்த விவா கரத்தில் ட்ரம்பிற்கு ஒரு விதம அச்சம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கூறப் படுகிறது. (இ-12)

## பெரும்பான்மையை நிரூபிப்பேன் ஓ.பன்னீர்செல்வம் உறுதி

இராஜினாமாவை திரும் பப் பெறும் கட்டாயச் சூழல் ஏற்பட்டால் திரும்பப் பெறுவ தாகவும், சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூ பிக்கவுள்ளதாகவும் முதல மைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

பதவி விலகிய முதல மைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் இரவு ஜெயலலிதா வின் சமாதியில் தியானம் செய்த பின்னர் அளித்த பேட்டி அரசி யலில் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது. இராஜினாமா செய்ய கட்டாயப்படுத்தப்பட்ட தாக கூறிய அவர், 75 நாட் களும் அப்பலோ வைத்திய சாலைக்குச் சென்றும் ஒரு முறை கூட ஜெயலலிதாவை வைத் தியசாலையில் சந்திக் கவே இல்லை என்றும் தெரி வித்தார்.

அ.தி.மு.க.விற்கு எந்த நிலையிலும் நான் துரோகம் செய்யவில்லை. பன்னீர் செல்வம் துரோகம் செய்து விட்டான் என ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

இராஜினாமாவை திரும் பப் பெறும் கட்டாயச் சூழல் ஏற்பட்டால் திரும்பப் பெறு வேன். ஆளுநர் சென்னை வந்ததும் அவரை சந்திப் பேன்.

சட்டமன்றம் கூடும்போது எனக்கான ஆதரவு தெரிய வரும். சட்டமன்றத்தில் பெரும பான்மையை நிரூபிப்பேன். அ.தி.மு.கவுக்கு சோதனை ஏற்பட்ட காலத்தில் 2 முறை முதல்வராக இருந்துள் ளேன்.

என் மீதான குற்றச்சாட் டுக்கு காலம் பதில் சொல் லும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-12)

## பனிக்கட்டிகள் சூடாகும் அபாயம் சுவிஸ் நாட்டுக்கு ஆபத்தா?

சுவிட்சர்லாந்து நாட்டில் வரலாறு காணாத வகையில் நிரந்தர பனிக்கட்டிகள் வெப்ப மடைந்துள்ளன.

சுவிஸின் நிரந்தர பனிக் கட்டிகள் கண்காணிப்பு சேவை நிறுவனமான Permos அமைப்பு யில் நடத்தியுள்ள களஆய்வில், கடந்த 2016 வருடத்தில் பனிக கட்டிகள் வெப்பமாவது அதிக ரித்துள்ளது தெரியவந்துள்ளது.

சுவிட்சர்லாந்து பிரதேசத் தில் மொத்தம் ஐந்து சதவீத அளவு நிரந்திர பனிக்கட்டி கள் சூழ்ந்துள்ளது முக்கிய விடயமாகும்.

10-20 மீற்றர் ஆழத்தில் நிரந்தர பனிக்கட்டிகள் வெப்ப நிலையானது, கடந்த ஆண்டு நாட்டின் பல பகுதிகளில் இது வரை இல்லாத அளவு அதிக மாக இருந்துள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும், கிரகம் வெப்பமான தின் விளைவே பனிக்கட்டிக ளும் அதிக அளவில் வெப்ப மாகியுள்ளது.

கடந்த வருடம் 2016 இல் கிரகம் அதிக வெப்பமானதாக இருந்ததாக உலக வானிலை மையமே சொல்லியதாக Permos கூறியுள்ளது.

கடந்த இருபது ஆண்டு களாகவே பனிக்கட்டிகளின் வேகம் வெகுவாக அதிகரித்துள ளது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# டொனால்ட் ட்ரம்பின் பயணத் தடை முஸ்லிம்களைத்தான் பாதிக்கிறது

## மேன்முறையீட்டு நீதிமன்று சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் விதிக்கப்பட்ட பயணத் தடை முஸ்லிம்கள் மீது பாகுபாடு காட்டுவதாக அமைந்துள் ளதா? என, அமெரிக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் கேள்வியெழுப்பியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கேள்வியெழுப்பிய நீதிபதி ரிச்சர்ட் கிளிப்டன் (Richard Clifton), உலகில் உள்ள 15 சதவீதமான முஸ்லிம்களை மட்டும் குறித்த தடை பாதிக்கு மாகவிருந்தால் அது அவர் கள் மீது பாரபட்சமாய் நடந்து கொள்வதைப் போலாகுமா? என கேள்வியெழுப்பியுள் ளார்.

குறித்த நீதிபதி, சான் பிரான்சிஸ்கோவில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன் றின் மூன்று முக்கிய நீதிபதி களில் ஒருவராவார்.

குறித்த விடயம் தொடர் பில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை சுமார் ஒரு மணித்தியாலம் விவாதங் கள் நடைபெற்றதாக தகவல் கள் குறிப்பிடுகின்றன.

எவ்வாறிருப்பினும் குறித்த மேன்முறையீட்டு விவகாரம் நாளடைவில் உச்சநீதிமன்றுக்கு எடுத்துச்செல்லப்படும் என தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-12)

# ஆப்கானில் உச்ச நீதிமன்றத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதல்

## 20 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ள சம்பவம் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கான் தலைநகர் காபூ லிலுள்ள உச்சநீதிமன்றத் திலே இந்த பயங்கரத் தாக்கு தல் நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ளது.

இதில் 20 பேர் பலியாகி யுள்ளனர். 45இற்கும் மேற் பட்டோர் படுகாயமடைந்துள் ளதாக முதற்கட்ட தகவல் கள் வெளியாகியுள்ளன.

எனினும் மீட்புப் பணி நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

உச்சநீதிமன்ற கார் நிறுத தும் வளாகத்திலே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற ஊழியர்களை குறி வைத்து இந்த தாக்குதல் நடத் தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுவரை எந்த தீவிர வாத அமைப்பும் இந்த தாக்கு தலுக்கு பொறுப்பேற்கவில்லை. சமீப மாதங்களில் தலிபான் மற்றும் ஏனைய தீவிரவாத அமைப புகள் தொடர்ந்து ஆப்கானில் தாக்குதலில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# ட்ரம்பின் கொள்கைகளை எதிர்த்து பல்கலை.மாணவர்கள் ஆர்ப்பாட்டம்


அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூ யோர்க்கிலுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன் னெடுத்துள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டம், மன்ஹாட்டனில் (Manhattan) உள்ள Foley சதுக்கத்தில் நடத்தப்பட்டது.



முஸ்லிம்கள் மீதான தடை, குடியேற்றம் தொடர்பான தடை, அமெரிக்க பல்கலைக் கழகங்கள் கொண்டுள்ள ஒட்டு மொத்த கடன் தொகை ஆகிய அனைத்து தொடர்பிலும் குரல் எழுப்பவே இந்த ஆர்ப் பாட்டம் ஒழுங்கமைக்கப்பட் டுள்ளது. (இ-12)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் அப்பையா தங்கம்மா

பிறப்பு 30.04.1934 இறப்பு 08.02.2017

நிலையில்லாத இவ்வுலகில்
நிலையான அன்பைத்தந்து
அவனியிலே நாம் வாழ
ஒளியாய் மின்னி
எம்மைப் புவியது போற்றக் கண்டு
மகிழ்வு கொண்டு
அன்பென்ற ஒற்றைச் சொல்லின்
அர்த்தமாய் வாழ்ந்த- எம்
உத்தமித்தாயே!
நீ இல்லையென்று
எண்ணுகையில்
நெஞ்சு பதைபதைக்க
உள்ளம் குமுறியழுதே!
வந்தவர்கள் போவதென்று
பாடம் படித்தோமம்மா- இன்று
அதை மனம் ஏற்க மறுக்கிறது
தாயில்லாப் பிள்ளைகளாய்த்
தவிக்கின்றோம்
வருவீரோ உம் அன்பு முகம் காண
துடிக்கிறோம் உம் பிள்ளைகள் நாம்.

(C-7500)

பணியாளர்கள்,

நியூ உதயா ஜுவலர்ஸ், உதயா ஜுவலர்ஸ்.



# ஆசியாவின் அடுத்த புலி இலங்கை

## அமெரிக்கா புகழாரம்

**(கொழும்பு)**

**ஆசியாவின் அடுத்த புலியாக மாறும் வாய்ப்பு இலங்கைக்கு இருப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொது இராஜதந்திர மற்றும் பொது விவகாரங்களுக்கான பதில் நிலைச் செயலர் புறூஸ் வாட்டன் தெரிவித்துள்ளார்.**

வோஷிங்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில், உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு கிடைக்கும் இந்த வாய்ப்புக் குறித்து ஒருபோதும் சந்தேகம் இருக்கவில்லை.

இப்போதைய நிலைமையில், அடுத்த ஆசியப் புலி இலங்கையேயாகும். அதற்கான ஆற்றலை இலங்கை பெற்றுள்ளது.

வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், முதலீடுகளை ஊக்குவிக்கவும் வணிகத்தை முன்னேற்றவும் உதவுவதன் மூலம் இலங்கையின் சிறிய நடுத்தர முயற்சிகளுக்கு அமெரிக்கா உதவுகிறது.

இலங்கையில் ஜனநாயக முன்னேற்றம் ஏற்பட்டிருக்காவிடின், இந்த ஒத்துழைப்பு சாத்தியமாகியிருக்காது.

இலங்கை வளர்ச்சியைப் பொறுத்து இளையதாக இருப்பினும், அமெரிக்காவும், இலங்கையும் பழைய நண்பர்கள். 21 ஆம் நூற்றாண்டில் ஒரு நாட்டில் மிக முக்கிய சொத்தாக அதன் மக்களே இருப்பர்.

பெரிய சாதனைகளைப் புரியக்கூடிய அறிவுள்ள மக்களை, இலங்கையினால் பெறக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# அணை, பாதைத் திட்டம் உறவுகளைப் பலப்படுத்தும்

## இலங்கைப் பிரதமரிடம் சீனப் பிரதமர் நம்பிக்கை

சீன- இலங்கை இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதையிட்டு, சீன- இலங்கைப் பிரதமர்களும், தமக்கிடையில் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

1957ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையில் முறையான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டதில் இருந்து, உறவுகளில் நிலையான அபிவிருத்தியை பேணிவந்ததுடன், அதனை வலுப்படுத்தியுள்ளன என்று சீனப் பிரதமர் லி கெகியாங் தெரிவித்துள்ளார்.

அண்மைய ஆண்டுகளாக இரண்டு நாடுகளும் பரந்துபட்ட ஒத்துழைப்பையும், உறவுகளையும் பலப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பாக அணை மற்றும் பாதை திட்டத்தைப் பயன்படுத்தியுள்ளன.

மரபுசார் நட்பையும், ஆழமான ஒத்துழைப்பையும் பயன்படுத்தி, சீன- இலங்கை மூலோபாய கூட்டானது இன்னும் சாதனைகளை அடைய முடியும், அதற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்ற சீனா விரும்புகிறது என்றும் சீனப் பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளை, ஒரு பாதை ஒரு அணை திட்டத்தின் மூலம், இரண்டு நாடுகளுக்கு புதிய பரப்புகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வாய்ப்புகளை அளித்துள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.



இரண்டு நாட்டு மக்களுக்கும் நன்மையளிக்கும் வகையில், சீனாவுடன் இலங்கை ஆழமான இருதரப்பு உறவுகளையும், பரந்துபட்ட ஒத்துழைப்பையும் தொடர்ந்து பேணும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இலங்கைப் பெண்கள் தொடர்பாக ஐ.நா. கூட்டத் தொடரில் மீளாய்வு

பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை அகற்றுவது தொடர்பான ஐ.நா. குழுவின் கூட்டத்தொடரில், இலங்கையின் பெண்களின் உரிமைகள் தொடர்பாக மீளாய்வு செய்யப்படவுள்ளது.

பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை அகற்றுவது தொடர்பான ஐ.நா. குழுவின் கூட்டத்தொடர் இம்மாதம் 13ஆம் திகதி தொடக்கம் மார்ச் 3ஆம் திகதி வரை, ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை உக்ரேன், அயர்லாந்து, ஜோர்தான், எல்சால்வடோர், ஜேர்மனி, ருவாண்டா, மைக்ரோனேசியா ஆகிய நாடுகளில் பெண்களின் உரிமைகள் தொடர்பாக மீளாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கை தொடர்பான மீளாய்வு வரும், பெப்ரவரி 22ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு எதிரான எல்லா வகையான பாகுபாடுகளையும் அகற்றுவது தொடர்பான அனைத்துலகப் பிரகடனத்தை நாடுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றன என்பது குறித்து இந்த கூட்டத்தொடரில் ஆராயப்படும்.

இதன் போது 23 அனைத்துலக சுதந்திர நிபுணர்கள் சம்பந்தப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளுடனும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடுவர்.

இந்தக் கூட்டத்தொடரின் கண்டறிவுகள் தொடர்பாக எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என மேலும் தெரியவருகிறது. (இ-3)

# இன்று ஒரு தகவல்

## சுத்த உணர்வுகள்

சில வீடுகளில் நுழைந்தால் ஏன் தான் வந்தோம் என்று சில சமயம் ஆகிவிடுவதுண்டு.

நாற்காலிகள் சண்டையடித்துக் கொண்டு திசைக்கொன்றாய் கிடக்கும். அது துடைக்கப்பட்டு சுத்தமாக இருக்கும் என்கிறீர்களா? ஊகும்; உட்கார்ந்தால் நீங்கள் அழுக்காகிப் போவீர்கள்!

நேற்றுச் சாப்பிட்ட காபி டம்ளர்கள் அங்காங்கே கிடக்கும். தரையெல்லாம் குப்பை, சுவரெல்லாம் நூலாம் படைகள்.ஷோகேஸில் என்னென்ன அவசியமில்லையோ அவையெல்லாம் இருக்கும். குளியலறை வழுக்கிவிட்டு எலும்பை முறிக்கும். பாசி பிடித்துப் போன பக்கெட்டுக்கள் பல்லிளிக்கும். அங்கங்கே அவிழ்த்துப் போடப்பட்ட துணிகள், கண்ட கண்ட பொருட்கள் அங்கங்கே வீடெங்கும் இறைத்துக் கிடக்கும். அடுக்களையோ கேட்கவே வேண்டாம். கலண்டரோ நேற்றைய திகதியைக் காட்டும்.

மொத்தத்தில் வீட்டைவிட்டு எப்படா வெளியேறுவோம் என்கிற உணர்வே மிஞ்சி நிற்கும். ஏன் வீட்டை இப்படிப் போட்டு வைத்திருக்கிறீர்கள்? என்று நீங்கள் எந்தக் குடும்பத் தலைவியையும் கேட்டுவிட முடியாது. கேட்டாலுமே அழகாகச் சாக்குப் போக்குச் சொல்வார்கள்.

எடுத்து வச்சுக் கட்டுப்படியாகலை. இவரும் புள்ளைகளும் ரொம்ப மோசங்க. நேரமே இல்லைங்க. வேலை சரியாக இருக்கு என்றெல்லாம் இவர்கள் அடுக்கும் காரணங்கள் ஏற்க முடியாதவை ஆகும்.

சுத்த உணர்வு என்பது குடும்பத் தலைவி அல்லது தலைவன் இவர்கள் ஒருவரிடத்தில் இருந்தால் கூடப் போதும். இந்த நல்ல வியாதி ; மற்ற உறுப்பினர்களுக்கும் நிச்சயம் அதி விரைவில் பரவும்.

ஐயோ பாவம்! நாம் அங்கங்கே அதை யதைப் போட எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறாளோ/றாரே என்ற பரிதாப உணர்வைப் பிற உறுப்பினர்களுக்கு வர வழைக்கும் வரையில் ஒருவரேனும் சோர்வு இல்லாமல் இந்த விடயத்தில் முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக,அவர்கள் நம்மைக் கவனிக்கும் நேரமாகப் பார்த்துக் கூட ஒதுங்க வைக்கலாம்! பார்க்கட்டுமே.

ஒரு கால கட்டம் வரையில் இந்த விடயத்தில் மனமாற்றம் ஏற்படவில்லை என்றால்,இப்படி எடுத்து ஒழுங்குபடுத்துபவர்கள் மற்றவர்களைக் கண்டிக்கக் கூட ஆரம்பிக்கலாம். ஒரு மகன் கூட இந்த விடயத்தில் அப்பாவைக் கண்டிக்கலாம். இந்தாங்கப்பா இது உங்க சட்டை, ஹங்கரில் மாட்டுங்க! என்று உத்தரவே இடலாம். ஆனால் அந்த மகன் அப்படிச் சொல்வதற்குச் சில நாள் முன்புவரை வீட்டை ஒழுங்குபடுத்துவதில் நல்ல பெயரைப் பெற்றிருக்க வேண்டும். போடா! நீ ரொம்ப ஒழுங்கு, என்னைச் சொல்ல வந்துட்டே! என்று சொல்ல இடமிருந்தால் இம் முயற்சி பலன் அளிக்காது.

சுத்த உணர்வு இல்லாத குடும்பத்தில் இப்படி ஒவ்வோர் உறுப்பினரேனும் முன்வர வேண்டும். நன்கு பலன் தெரியும்.

வீட்டிற்குள் நுழைபவர்கள் முதலில் முகங்களைப் பார்க்கிறார்கள்; அப்புறம் வீட்டை நோட்டம் விடுகிறார்கள். வீடு அருவருக்கத்தக்க முறையில் இருந்தால் அந்த வீட்டிலுள்ள அத்தனை பேரைப் பற்றியும் குறைத்து மதிப்பிட்டு விடுகிறார்கள்.

ஒரு சுத்தமற்ற வீடு, நாங்கள் பொறுப்பற்றவர்கள், நாங்கள் மகா சோம்பேறிகள், எதைப் பற்றியும் கவலைப்படாதவர்கள் என்று குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் பலவகையான அவப் பெயரைத் தேடித் தந்துவிடுகிறது.

இதற்கு இடங்கொடுப்பானேன்?

**லேனா தமிழ்வாணன்**

# வெலிஓயா (மணலாறு) பிரதேச செயலகம் உருவான வரலாறு-பகுதி II

குடியிருப்பாளர்கள் பாதுகாப்பில் பயிற்சிபெற்றவர்களாகவும், ஊர்காவற்படையில் கடமை புரிபவர்களாக இருந்தனர். இப் பகுதியில் ஏற்றுகஸ்வேவ, நிக்கவேவ, கிரிலிபன்வேவ நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டன- கஜபாபுர, கலியாணபுர, ஏற்றுகஸ்வேவ, ஜனகபுர, கிலிபன்வேவ, கஜபாபுர, நிக்கவேவபோன்றகுடியிருப்புகள்அமைக்கப்பட்டன.

வெலிஓயா பிரிவின் முக்கிய நிர்வாக மையமாக சம்பத்நுவர வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இங்கு பிரதேச செயலகம், கமநலசேவை நிலையம், வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. சம்பத்நுவர மத்திய மகா வித்தியாலயம் இன்று ஒரு தேசிய பாடசாலையாக இருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததும் வெலிஓயா பிரதேசத்தின் எதிர்கால நிர்வாக அமைப்பு, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்கு தொடுவாய், தென்னமரவாடி மக்களின் மீள் குடியேற்றப் பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கின. முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் அகதிகளாக இருந்த இக் கிராமங்களின் மக்கள் இறுதியில் செட்டிகுளம் புனர்வாழ்வு மையங்களில் இருந்தனர். 2010 ஆண்டு வரையில் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் கருநாட்டுக்கேணி மக்கள் 25 வருடங்களுக்கு மேல் அகதிகளாக வாழ்ந்து தங்கள் பூர்வீக கிராமங்களுக்கு சென்றனர். இவர்களின் புனர் வாழ்வும் இவைகளின் மீள்கட்டுமானங்களும் மிகவும் சவால் நிறைந்ததாகவும் இருக்கின்றது. இவர்களது மீன்பிடி பாடுகள் இன்று தென்னிலங்கை சிங்கள மீனவரிடம் இருக்கின்றன.

இக் கிராம மக்களுக்கு சொந்தமான 2524 ஏக்கர் நெற் காணிகள் வெலிஓயா விவசாயிகளுக்கு மகாவலித்திட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. இக் காணிகளை மீள் பெற பெரும் போராட்டம் நடத்தவேண்டியுள்ளது. மாற்றுக்காணிகள் கொடுக்கப்படும் என்ற பேச்சுக்கள் இடம்பெற்றாலும் இதுகுறித்து இன்னமும் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை.

வடமாகாணத்துக்கு உட்பட்ட, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சேர்மதியான நிலப் பரப்புகள் வெலிஓயா பிரதேச செயலகம் ஆக முல்லைத்தீவு மாவட்டத்துடன் 2012 இல் இணைக்கப்பட்டு இன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபரினால் நிர்வகிக்கப்படுகின்றது.

1988 இல் இருந்து 2012 வரை இப் பிரதேசம் அநுராதபுர மாவட்ட அரசாங்க அதிபரால் நிர்வகிக்கப்பட்டது. வெலிஓயாவின் பதவியாப்பகுதி அநுராதபுர மாவட்ட பதவி பராக்கிரமபுரத்தின் கீழும் தென்னமரவடிக் கிராமம், திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலக பிரிவிற்குள் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. அமரயல் பகுதியின் ஒரு பகுதி, திருகோணமலை பதவி சிரிபுர பிரதேச செயலக பிரிவின் கீழும் இன்னொரு பகுதி குச்சவெளி பிரதேச செயலக பிரிவின் கீழ் மீள இணைக்கப்பட்டுள்ளது.

அமரவயல் எல்லைகள் குறித்து குச்சவெளி/ பதவிசிறிபுர பிரதேச செயலகங்களுக்கிடையே பிணக்குகள் இருப்பதாக சொல்லப்படுகின்றது.வெலிஓயா பிரதேச செயலக பிரிவு முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட பரப்புகளை அடக்கியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் எஹெட்டு கஸ்வெவ கிராமம், இடது கரை கிரிஇப்பன்வெவ கிராமம், நவகஜபாபுர கிராமம், ஜனகபுரம் ஆகிய கிராமங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகின்றன. கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வெலிமட கிழக்கு வட்டாரப்பகுதியை உள்ளடக்கியது.

வவுனியா மாவட்டத்திற்குள் அடங்கும் வெலிஓயா பிரதேசங்கள் பின்வருமாறு,

கஜபாபுர கிராம அலுவலகர் பிரிவு, கலியாணபுர கிராமசேவகர் பிரிவு, எத்தா வெட்டுனுவெவ கிராம அலுவலகர் பிரிவு, நிக்கவெவ கிராம அலுவலகர் பிரிவு, நிக்கவெவ இடது கிராம அலுவலகர் பிரிவு ஆகியன வவுனியா மாவட்டத்திற்குள் அடங்குகின்றன.

வெலிஓயா பிரதேச செயலக பிரிவின் ஒரு சிறு பகுதி தான் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்றுக் கீழ் வருகின்றது. இது ஒருவட்டாரமாக (வலிமடைகிழக்கு) கரைதுறைப்பற்றுக்கு வருகின்றது. வெலிஓயாவின் பெரும்பகுதிவவுனியா மாவட்டத்திற்குள் வருவதுடன் வவுனியா வடக்கு பிரதேச சபைக்குள் நான்கு வட்டாரங்கள் வருகின்றன. (I) கஜபாபுர, மொனறவெமி, (II) கலி யாணபுரக் கிராமம் (III)எத்தா வெட்டுனுவெவ (IV) சம்பத்நுவர. இந்த நான்கு வட்டாரங்கள் அடங்கும். பிரதேசம் மிகவும் அடர் ஒதுக்கப்பட்ட காட்டுப்பரப்பால் நெடுங்கேணி பிரதேசத்தில் இருந்து பிரிந்து இருக்கின்றது. போக்குவரத்து கூடுதலாக பதவியா வழியாகவே இடம் பெற்று வருகின்றது.

2012 ஆம் ஆண்டு குடிசன கணிப்பின் படி, வெலிஓயா பிரதேச செயலகம் 6904 பேரைக் கொண்டு இருந்தது. இதன் குடிசனத் தொகையில் சிங்களவர்களின் விகிதம் 99.77%மாகவும். பௌத்தர்களின் விகிதம் 99.12% ஆகவும் இருந்தது.

அட்டவணை ஒன்றில் கிராம அலுவலகர் பிரிவின் அடிப்படையில் வெலிஓயா பிரதேச பிரிவின் குடிசனத்தொகை பின்வருமாறு

அட்டவணை I

| பிரிவு | குடித்தொகை |
|---|---|
| கஜபாபுர | 277 |
| கலியாண்புர | 556 |
| எத்தட்டுகஸ்வெவ | 1335 |
| கிரிபன்வெவ | 819 |
| ஜனகபுர | 613 |
| நவகஜபாபுர | 225 |
| நிக்கவெவ இடதுகரை | 1129 |
| எதவெட்டுனுவெவ | 968 |
| நிக்கவெவ தெற்கு | 910 |
| | 6904 |

இன்று வெலிஓயாவின் மக்கள் தொகை 13000 இற்கும் மேற்பட்டு இருக்கின்றது வெலிஓயா வடக்கு மாகாணத்திற்கு மாற்றப்பட்ட பிறகு இது பல்வேறு உதவித்திட்டங்களைப் பெற்றுள்ளது. அரசியல் வழிகளாலும்,உயர் பதவி வகிப்பவர்களின் உதவிகள் பல்வேறு வழிகளில் இப் பிரிவுக்கு கிட்டியுள்ளது சம்பத்நுவர மகாவித்தியாலயம் இன்று வளர்ச்சி பெற்ற தேசிய பாடசாலையாகும்.

இது போல உலகவங்கி வீட்டுத் திட்டம் ,இந்திய வீட்டுத்திட்டங்கள் மற்றும் பல அபிவிருத்தி திட்டங்கள் மூலம் இப் பிரிவு நன்மை பெற்றுள்ளது.மேலும் இராணுவத்தின் உதவியுடன் பல அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ரணவிரு இசுறு வீடமைப்பு திட்டங்கள் மூலம் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவு முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் இருப்பினும் இதன் பரப்பு முல்லைத்தீவு,வவுனியா மாவட்டத்துக்குள் இருப்பது பொருத்தமற்றது. இதுபோல் வெலிஓயாவின் ஐந்து வட்டாரங்களில் நான்கு வவுனியா வடக்குப்பிரதேச சபையின் கீழும் ஒருவட்டாரம் கரைதுறை பற்றுக் கீழும் வருகின்றது. வவுனியா வடக்கு தமிழ் மக்களும்,வெலிஓயா சிங்களமக்களும் இந்த ஒழுங்கை விரும்பவில்லை இரு பிரிவினரும் பிரிந்து தனித்தனி பிரதேச சபைகள் அமைக்க கோருகின்றனர். இவர்களது கோரிக்கை நியாயமானது.

வெலி ஓயா பிரதேசப் பிரிவு உருவாக்கம் பல நிலைகளில் தமிழ் மக்களுக்கு குறிப்பாக வடமாகாண மக்களுக்கு கவலையைக் கொடுத்துள்ளது. இப் பிரதேச உருவாக்கத்தின் மூலம் தாங்களது பாரம்பரிய பூர்வ நிலப்பரப்பை இழந்ததுடன், தமிழ் முயற்சியாளர்களினால் விருத்தி செய்யப்பட்டு மக்கள் குடியேறிய பகுதியை அரசு தனது அதிகார பலத்தினால் கையகப்படுத்தியதுடன் இங்கு வாழ்ந்த மக்களையும் வெளியேற்றிவிட்டனர். மேலும் இப் பகுதியில் பிற இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள மக்களைக் குடியேற்றி முல்லைத்தீவு , வவுனியா மாவட்டங்களின் குடிசனத் தொகையில் இனப்பரம்பல் இன விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் கரிக்கட்டு மூலை தெற்கு மக்களின் விவசாயக் காணிகளை மகாவலித் திட்டத்திற்குள் உள்வாங்கி அவற்றை புதிதாகக் குடியேறியவர்களுக்கு கொடுத்துள்ளனர்.

இதனால் கரிக்கட்டுமூலைதெற்கு மக்கள் விவசாயக்காணிகளை இழந்து வாழ்வாதாரத்திற்குப் போராடுகின்றார்கள். சிங்கள மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுயமாக குடியேறுவதை தமிழ் மக்களோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் என்றும் எதிர்க்கவில்லை.

ஆனால் அரச உதவியுடன் திட்டமிட்ட உள்நோக்கம் கொண்ட சிங்கள குடியேற்றங்களையே எதிர்க்கின்றனர். இதனால் தான் தங்களுக்கு நில அதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து முன்வைக்கின்றனர்.

இச் சூழ்நிலையில் வெலி ஓயாவிற்கு வெளியில் வவுனியா மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட சில குடியேற்றங்களை இங்கு நோக்குவோம். வவுனியா வடக்கு செயலகப் பிரிவில், வெடி வைத்த கிராம அதிகாரி பிரிவில் தூர்ந்த நிலையில் இருந்த கொக்கச்சான் குளப் பகுதியை வவுனியா தெற்கு சிங்கள பிரிவுக்குள் மாற்றி வடக்கின் வசந்தம் நிதி மூலம் குளத்தை புனருத்தாரணம் செய்து 168 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் தமிழ் விவசாயிகள் 300 ஏக்கர் நிலத்தை இழந்ததுடன் இக் குளத்தின் பெயரை காலபோவசெவ என மாற்றியுள்ளனர். மேலும் இக் குடியிருப்பிலிருந்து மகாகச்சக் கொடிய குடியிருப்புவரை 22கிலோமீற்றர்நீளமான தார் போடாத பாதை அமைக் கப்பட்டுள்ளது. இப் பாதை வெலிஓயா – வவுனியா நகர் தொடர்பை விருத்தி செய்ய உதவும். 1978 இல் கொக்கச்சான் குளத்தை புனருத்தாரணம் செய்து சிங்களக் குடியிருப்பு அமைக்க முற்பட்ட போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. ஆனால் இத்திட்டத்தை 35 வருடங்களின் பின்னர் நிறைவேற்றியுள்ளனர்.

2013,2014 ஆம் ஆண்டுகளில் வவுனியா தெற்கு சிங்களப் பிரிவில் 2500 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 10000 மக்களைக் குடியேற்ற பெரும் எடுப்பில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அதற்கு வழமையான நிர்வாக நடவடிக்கைகளைக் கையாளாமல் அரசியல்வாதிகள், படையினர் மற்றும் சிறப்பு அதிகாரிகள் மூலம் குடியானவர்கள் தெரிவு, நிலப் பங்கீடு குடியேற்றங்கள் இடம்பெற்றன.

இத் திட்டத்தை சிங்கள மக்கள் மீள்குடியேற்றமென்று கூறி சர்வதேச உதவிகள் மற்றும் அரச ஒதுக்கீடுகளை இங்கு செலவு செய்தனர். உண்மையில் இங்கு குடியேறியவர்கள் முன்னர் இங்கு வாழ்ந்தவர்கள் அல்லர் இப் பிரிவில் அமைக்கப்பட்ட குடியி ருப்புக்களானவை.1.போகஸ்வெவ (I) 2.பொகஸ்வெவ (II) 3.நாமல் கம 4.நந்தி மித்திரகம 5.செனி கம 6. வெரத் தென்ன

இக் குடியிருப்புக்களில் குடியேறியவர்களுக்கு மூன்று ஏக்கர் நிலமும் பல்வேறு வாழ்வாதார உதவித் திட்டங்களும் வழங்கப்பட்டன. மேலும் குடிநீர், மின்சாரம், பாதைகள், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளின் மேம்பாட்டில் வடமாகாண ஆளுநர் அலுவலகமும் படைப்பிரிவினரும் பெரும் பங்காற்றினர்.

2014 ஆம் ஆண்டளவில் இக் குடியிருப்புகளில் 2229 குடும்பங்களைச் சேர்ந்த 6271 பேர் இருந்ததாக கணிப்பிடப்பட்டுள்ளது. திரு. என்.எம்.அமீனின் கட்டுரையின் படி இக் குடியிருப்புகளில் 2800 குடும்பங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். போகஸ்வெவ I 500 குடும்பங்கள், போகஸ்வெவ II 500 குடும்பங்கள், வீரத்தென்ன


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

520குடும்பங்கள், நாமல்கம 450 குடும்பங்கள், சினலினி 450 குடும்பங்கள், நந்திமித்திரகமவில் 360 குடும்பங்கள் இருந்ததாகவும் ஒவ்வொரு குடும்பமும் 3 ஏக்கர் நிலம் பெற்றதாக குறிப்பிடப்படுகின்றன.

இக் குடியிருப்புகள் யாவும் வவுனியா தெற்கு சிங்களப் பிரிவுக்குள் அமைந்ததால் தமிழ் மக்களின் காணிகளுக்கு பிரச்சினை ஏற்படவில்லை. 2012 ஆம் ஆண்டுக் குடிசனக் கணிப்பில் வவுனியா தெற்கு பிரிவு 12397 பேராக அதிகரித்துள்ளது.தற்பொழுது இப் பிரிவில் குடிசனத் தொகை 25000 இற்கும் மேலாக இருக்கலாம். இப் பிரிவில் துரித குடிசன அதிகரிப்பு மாவட்ட இன விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். புதிய குடியேற்ற வாசிகளுக்கும் பாரம்பரியமாக இருந்த சிங்கள மக்களுக்கும் இடையே மனக்கசப்பு நிலவுவதாக அறிய வருகிறது.

வெலிஓயா பிரதேச செயலக உருவாக்கமும் வவுனியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் சிங்களக் குடியிருப்புக்களும் குடியேற்றங்களும் வன்னி பிரதேச இன, சமய, சமூக, பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைகளில் மாற்றங்களைக் கொண்டு வரும். தனிப்பண்பாட்டுத் கோலங்களிலிருந்து பல்லின பண்பாட்டு கோலங்கள் விருத்தி பெறலாம். முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா பிரதேச செயலகம் உருவாக்கம் புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது. இது போல வவுனியா வடக்கு பிரதேச சபையில் புதிய சிங்கள வட்டாரங்கள் உருவாக்கும் புதிய நிலைமைகளை தோற்றுவித்துள்ளன.

வன்னி பிரதேசத்திற்குள் மகாவலி அபிவிருத்தி L,I,J,K ஆகிய நான்கு அபிவிருத்தி வலயங்கள் அடங்குகின்றன. இவற்றுள் L வலயத்தின் ஒரு பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் மகாவலி அபிவிருத்தி I வலயத்தை - மல்வத்துஓயா - அருவியாறு பள்ளத்தாக்கை அபிவிருத்தி செய்ய ஆரம்பிக்கின்றது.

இவ் அபிவிருத்தி செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவிலும். அநுராதபுர மாவட்டத்தில் தந்திரி மலைப் பிரதேசத்திலும் கூடுதலாக இடம் பெறும். இந் நிலையில் வெலிஓயா போன்று இன்னொரு பிரச்சினை செட்டிகுளம் மடு பிரதேச பிரிவுகளில் ஏற்படாதிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். (முற்றும்)

## சட்ட நூல்கள் முதற்தடவையாக தமிழில் ஜனாதிபதியிடம் கையளிப்பு



இலங்கையில்முதற்தடவை யாக தமிழில் மொழி பெயர்க் கப்பட்ட இலங்கை சட்டம் தொடர்பிலான நூல்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நீதி மற்றும் புததசாசன அமைச்சர் விஜேய தாஸ ராஜபக்ஷவினால நேற்று முன்தினம் கையளிக்கப் பட்டது.

இதற்கான நிகழ்வு ஜனா திபதி செயலகத்தில் நடை பெற்றது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதிய இலங் கைக்கான நிலையான வதி விடப் பிரதிநிதி ஊனா மெக் கோலியும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். (இ-3)

## வைத்திய அதிகாரிகள் என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்- மகிந்த

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரி கள் சங்கம் (GMOA) கூட்டு எதிர்க் கட்சி என்ற வகையில் என்னை சந்தித்து கலந்துரை யாடியது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம்நடைபெற்ற நிகழ்வொன் றில் கலந்துகொண்டு, ஊடக வியலாளர் எழுப்பிய கேள விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

வைத்திய சங்கக் குழு தங்களை சந்தித்து கலந் துரையாடியதாக கூறப்படு கின்றது இது உண்மையா? என மகிந்த ராஜபக்ஷ எம். பி.யிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

கூட்டு எதிர்க் கட்சியின் தேவையை நிறைவேற்றும் முகமாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் (GMOA) நாட்டில் அரசாங்கத்தை நெருக் கடிக்குள் தள்ளுவதற்கு சதி செய்து வருவதாக அதன் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# பேரறி விடுதலை தொடர்பான மறு சீராய்வு மனு தள்ளுபடி



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறி வாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெறுவது அவசியம் என்ற தீர்ப்பை மறு சீராய்வு செய்யக் கோரி தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

குறித்த மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தலைமை நீதிபதி ஜே.எஸ். கேஹர், நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ், எஸ்.ஏ.போப்டே, ஏ.எம்.சப்ரே, யு.யு.லலித் ஆகியோர் அடங்கிய அரசி யல் சாசன அமர்வு முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணைக்குப் பின்பு தமிழக அரசு மற்றும் பேரறி வாளன் ஆகியோரின் மறு ஆய்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் ஆயுள் தண்டனை அனுப வித்து வரும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடு தலை செய்யப்போவதாக தமிழக அரசு அறிவித்தது.

இதை எதிர்த்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் அரசி யல் சாசன அமர்வு, சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்ட வழக்குகளில் ஆயுள் தண் டனை பெற்ற கைதிகளை மாநில அரசு விடுதலை செய்ய முடியாது. மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றே விடுவிக்க முடியும் என்று தீர்ப்பு வழங்கியது.

மத்திய அரசின் ஒப்பு தலை மாநில அரசு பெற வேண்டும் என்ற அம்சத்தை மறுஆய்வு செய்யக்கோரி தமிழக அரசு சார்பிலும், பேரறிவாளன் சார்பிலும் உச்ச நீதிமன்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன என் பது குறிப்பிடத்தக்கது.(இ-12)

## வருடாந்த பொதுக்கூட்டம்

வாதரவத்தை கல்வி முன்னேற்றக் கழக வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வாதர வத்தை விக்னேஸ்வரா வித் தியாலய பிரதான மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக பல முக்கிய மான விடயங்கள் கலந்துரை யாடப்படவுள்ளதனால் வாத ரவத்தையைப் பிறப்பிடமாக மற்றும்வசிப்பிடமாகக்கொண்ட அனைவரையும் தவறாமல் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களையும் ஆலோச னைகளையும் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 981


Search for people, places and things    Nagendram Home

**வர்மா**

விட்டில போறவனுக்கு தகுதி
அதிகமாக இருக்கலாம்!
ஆனா ஒவ்வொரு படியா
ஏறிப்போறவனுக்குத்தான்
அனுபவம் அதிகம்!!!



**வசந்த்**




**அருண்**

டேய் இந்தக் களிமண் பொம்மை
நல்லா இருக்கு யாரடா செய்தது?




நான்தான்ணே.... என் மூளைய
உபயோகிச்சு செய்தேன்.

**ராதை**

எத்தனை முறை சண்டை
போட்டாலும் தேடி வந்து
பேசும் தெய்வம்



என் தாயைத் தவிர வேறு
யார் உண்டு இவ் உலகில்.

**கிரி**

ஒரு ஆணுக்கு நிறைய
பெண் தோழிகள் இருந்தால்
அவன் காதல் மன்னனாத்தான்
இருக்கணும்னு அவசியமில்லை.
கண்ணியமானவனாகவும்
இருக்கலாம்.

**சிந்து**

இந்தக் குழந்தைகளை புரிஞ்சிக்கவே
முடியலையே ஸ்கூல் போற
அன்னைக்கெல்லாம்
9 மணி வரை தூங்குதுங்க




இந்த சண்டே மட்டும்
6 மணிக்கெல்லாம் எழுந்துடுதுங்க.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தக்கோரி யாழில் கவனயீர்ப்பு




பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த கோரி நேற்றையதினம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் பெண்கள் அமைப்புக்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. அண்மையில் ஊர்காவற்றுறையில் கர்ப்பிணி பெண்ணொருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி கவனயீர்ப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் : உ.சாளின்)



**யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது...**



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்ற போது... **(படம்:-மகாலிங்கம்)**



அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் ச.மனோகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக தீவகத்தின் ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் ச. பாஸ்கரன், அருட்தந்தை டேவிட் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலையின் மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும் கணனி கையளிப்பும் அண்மையில் பாடசாலை அதிபர் குமுதினி அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் க. சர்வேஸ்வரன் தனது நிதி ஒதுக்கீட்டில் பெறப்பட்ட கணனியை கையளித்தார். சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் நா. சிவநேசன் கலந்து கொண்டார்.



கரவெட்டி பிரதேசசெயலகத்தின் கலாசார பிரிவினரால் நடத்தப்பட்ட நிகழ்வில் கலாபூஷண விருதினைப் பெற்ற சின்னத்துரை நவரத்தினத்திற்கு கரவெட்டி பிரதேச செயலர் சிவசிறி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.
**(படம்:-மகாலிங்கம்)**

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா-2017 இன்று ஆரம்பம்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா-2017 இன்று தொடக்கம் (09,10,11,12) எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் காலையும் மாலையும் இடம்பெறும்.

## கம்பன் புகழ் விருது 2017 பெறும் சான்றோர்

பேராசிரியர் சாலமன் பாப்பையா
. மூத்த தமிழறிஞர், தமிழ்நாடு



## கௌரவம் பெறும்பெருமக்கள்


வண.மரிய சேவியர் அடிகள்
நிறுவுநர்.திருமறைக்கலாமன்றம்


திரு. அருள் சுப்பிரமணியம்
எழுத்தாளர்


திரு.விக்டர் ஐவன்
'ராவய' பத்திரிகை ஆசிரியர்


பேராசிரியர் எம்.எம்.நாஜிம்
துணைவேந்தர். தென்கிழக்குப் பல்கலைக்கழகம்


திரு.பி.சுந்தரலிங்கம்
அறங்காவலர். மயூரபதி அம்மன் ஆலயம்


வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி
பணிப்பாளர். யாழ்.போதனா வைத்தியசாலை

## இவ்வாண்டு அறக்கட்டளை விருதுகள் பெறும் ஆற்றலாளர்கள்

'நாவலர் விருது' பெறுபவர்


சைவப்புலவர்
மு.திருஞானசம்பந்தபிள்ளை

'விபுலானந்தர் விருது' பெறுபவர்


சங்கீத பூஷணம். கலாநிதி
நா.வி.மு.நவரட்ணம்

'நுழைபுல ஆய்வு விருது' பெறுபவர்


தமிழ்மணி
அகளங்கன்

'மகரந்தச்சிறகு விருது' பெறுபவர்


இலக்கிய சாகரம்
அல்.அஸூமத்

'ஏற்றமிகு இளைஞர் விருது' பெறுபவர்


நாதஸ்வர வித்துவான்
கே.பி.குமரன்

## அறிவித்தல்

*பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்*

*மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு*

**வடக்கு மாகாணம்**

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ் மொழி மூலம்) - 2017 (II)

தமிழ்மொழி மூலம் மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.03.09 ஆகும்.

பாடரீதியாக காணப்படும் வெற்றிட எண்ணிக்கை விபரம் (தமிழ்மொழி மூலம்)

| | பௌதீகவியல் | இரசாயனவியல் | உயிரியல் | இணைந்தகணிதம் | பொறியியல் தொழில்நுட்பம் | உயிரியல் தொழில்நுட்பம் | தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - |
| வலிகாமம் | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 16 | 19 |
| வடமராட்சி | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | - | - |
| தென்மராட்சி | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - |
| தீவகம் | 1 | 1 | 2 | 2 | 1 | 2 | 1 | 8 | 6 |
| கிளிநொச்சி | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 14 | 26 |
| முல்லைத்தீவு | 1 | 2 | 2 | 1 | 2 | 1 | 2 | 19 | 30 |
| துணுக்காய் | 1 | 1 | 1 | 2 | 1. | 1 | 2 | 19 | 20 |
| மன்னார் | 1 | 1 | 2 | 1 | 3 | 2 | 1 | 30 | 31 |
| மடு | 1 | 2 | 2 | 1 | 2 | 2 | 1 | 2 | 3 |
| வவுனியா வடக்கு | 1 | 1 | 1 | 2 | 3 | 1 | 1 | 24 | 24 |
| வவுனியா தெற்கு | 1 | 1 | 2 | 1 | 3 | 1 | 1 | 6 | 11 |
| மொத்தம் | **12** | **14** | **19** | **15** | **21** | **15** | **14** | **138** | **170** |

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk→Recruitment and Exam→Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத் தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும் தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

*ரூ.வரதலிங்கம்.*
**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.**

---

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

## கம்பன் விழா 2017



(கொழும்பு) 09.02.2017 வியாழக்கிழமை

**மாலை 5.00 மணி**
**முதலாம் நாள் நிகழ்வு**
**கம்பன்பட ஊர்வலம்**
ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி திருக்கோவிலிருந்து....
(இல.11.இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு 06)
**மங்கல விளக்கேற்றல்**
திரு.வி.கயிலாசபிள்ளை தம்பதியர்
திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை
**கடவுள் வாழ்த்து**
**திரு.அ.ஆருரன்**
**தலைமையுரை**
**மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன்**
(பெருந்தலைவர். கொழும்புக் கம்பன் கழகம்)
தொடக்கவுரை
**திரு.தெ.ஈஸ்வரன்**
(தலைவர், கொழும்புக் கம்பன் கழகம்)
நூல் வெளியீடு
'கம்பனில் அரசியல்'
இறுவட்டு வெளியீடு
கம்பன் விழா 2016 (யாழ்.கொழும்பு)
இசை விழா 2016 (யாழ்.கொழும்பு)
**முதற்பிரதிகள் பெறுவோர்**
'இலக்கியப்புரவலர்' அல்ஹாஜ் உமர்
ஸ்ரீலஸ்ரீசந்திரசேகர சுவாமிகள் (ஆஞ்சநேயர் கோயில்)
திரு.எஸ்.பி.சுவாமி (ஸ்தாபகர், தினக்குரல்)
திரு.ஆர்.மகேஸ்வரன் (அதிபர், ரவி ஜுவலர்ஸ்)
திரு.ஏ.மதுரைவீரன் (தலைவர், மனவளக்கலை, கொழும்பு)
அறக்கட்டளை விருதுகள் வழங்கல்
பரிசில்கள் வழங்கல்
அமரர் துரை.விஸ்வநாதன்
நினைவுப் பேச்சுப்போட்டி
அமரர் பொன். பாலசுந்தரம்
நினைவுக் கவிதைப் போட்டி
அமரர் இ. நமசிவாய தேசிகர்
நினைவு மனனப் போட்டி
சமூக நிதி உதவி வழங்கல்
நிறுவனநிதி உதவி: மட்டக்களப்பு யோகர் சுவாமிகள் மகளிர் இல்லம்
அமரர் ஏ.எல். அலமேலு ஆச்சி ஞாபகார்த்த நிதி உதவி
குடும்ப நிதி உதவி: செல்வி சுப்பையா மகேஸ்வரி-
மருத்துவ உதவி அமரர் சி.கே.இலங்கைராஜா ஞாபகார்த்த நிதி உதவி
**பட்டிமண்டபம்:**
நடுவர்: புலவர் தா.கு.சுப்பிரமணியம்
**பொருள்:**
**''பெரிதும் ஆச்சரியம் தரும் அனுமனின் அறிவுத் தடுமாற்றம் எது?''**
***மண்டோதரியின் மாட்சியில் மயங்கியதே!***
**நா.விஜயசுந்தரம் - த.சிவசங்கர்**
***சீதையை சிறை மீட்க விரும்பியதே!***
**இரா.செல்வவடிவேல்-ஸ்ரீபிரசாந்தன்**
***மாய சீதை வதையில் கலங்கியதே!***
தி.வேல்நம்பி- ஐ.கதிர்காமசேகரம்
***நோக்கர்குழு***
**தலைவர்: திரு. ஜி.இராஜகுலேந்திரா**
**டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
திரு.கே.எஸ்.சிவகுமாரன்
திருமதி அன்னலட்சுமி இராஜதுரை
திரு.ஆர்.வைத்தமாநிதி
திரு.ச.இரகுபதி பாலஸ்ரீதரன்
திருமதி பத்மா சோமகாந்தன்

**கொழும்பு கம்பன் கழகம்**

---

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கற்கை நெறியினை தொடர்வதற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 10,11, 12, 13 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன .

மேலும் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழ் கடிதங்கள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி அழைப்பிதழ் கடிதம் கிடைக்கப் பெறாதோர் மேற்படி நிலையத்துடன் 09.02.2017 (வியாழக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 2.30 மணி வரை தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ)



# சிறுவர் அரங்கம்

## ஆல்ப்ரெட் ராஜாவும் பிச்சைக்காரனும்

அரண்மனையை ஒட்டி வசித்த பிச்சைக்காரன் ஒருவன், அந்த அரண்மனைக் கதவில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்பைக் கண்டான். அதில், மன்னர் விருந்தளிக்கப் போவதாகவும், அரச உடை அணிந்து வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிச்சைக்காரன், தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டான். நிச்சயமாக அரசரும், அவருடைய குடும்பத்தினரும் மட்டுமே ராஜ உடை உடுத்தியிருக்க முடியும் என எண்ணினான்.

திடீரென அவனுக்குள் ஓர் எண்ணம்... அந்த மாதிரி எண்ணுகிற அளவுக்குத் தனக்குள் ஏற்பட்ட துணிச்சலைப் பற்றி யோசித்த போதே, அவனுக்குள் நடுக்கம் ஏற்பட்டது.

இருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அரண்மனை வாசலை அடைந்தான்.

வாயிற்காவலனிடம், "ராஜாவைப் பார்க்க வேண்டும்" என்றான். அந்தக் காவலன், அரசரிடம் அனுமதி வாங்கி வந்தான். உள்ளே வந்த பிச்சைக்காரனிடம், "என்னைப் பார்க்கவேண்டும் என்றாயாமே?" என்றார் அரசர். "ஆமாம்! நீங்கள் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள எனக்கும் ஆசை. ஆனால், என்னிடம் ராஜ உடைகள் இல்லை. என்னை அதிகப்பிரசங்கி என நினைக்காவிட்டால், உங்களது பழைய ஆடையை அளித்து உதவினால், அதனை அணிந்துகொண்டு விருந்துக்கு வருவேன்" என்றான் மிகவும் பவ்வியமாக.

அதே நேரம், மன்னர் என்ன சொல்வாரோ என நடுங்கியபடி, அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் மன்னர், அவனுக்கு ராஜ உடை ஒன்றை வழங்கினார். அந்த உடையை உடுத்திக்கொண்டவன், கண்ணாடி முன் நின்று கவனித்தான் தோற்றத்தில் கம்பீரம் மிளிர்வதைக் கண்டு வியந்தான்!



அப்போது மன்னர் அவனிடம், "விருந்தில் கலந்து கொள்வதற்குத் தகுதி உடையவனாகி விட்டாய். அதைவிட, முக்கியமான ஒன்று... இனி உனக்கு வேறெந்த உடையும் தேவைப்படாது. உன் ஆயுள் முழுவதும் இந்த உடை அப்படியே இருக்கும். துவைக்கவோ தூய்மைப் படுத்தவோ அவசியம் இருக்காது" என்றார். கண்ணீர்மல்க, மன்னருக்கு நன்றி கூறி விட்டுக் கிளம்ப யத்தனித்தவன்,

மூலையில் கிடந்த தனது பழைய ஆடைகளைக் கவனித்தான். அவனது மனம் சற்றே சலனப்பட்டது. "ஒருவேளை, அரசர் கூறியது தவறாக இருந்து, இந்த உடைகள் கிழிந்து விட்டால்... அப்போது நமக்குப் பழைய உடைகள் தேவைப் படுமே?!" என யோசித்தவன், சட்டெனச் சென்று தன் பழைய உடைகளை வாரிக்கொண்டான்.

வீடு வாசல் இல்லாத அவனால் பழைய துணிகளை எங்கேயும் வைக்க முடியவில்லை எங்கே போனாலும் பழைய ஆடைகளையும் சுமந்தே திரிந்தான். மன்னர் அளித்த இரவு விருந்தையும் அவனால் மகிழ்ச்சியாக ஏற்க முடியவில்லை. அடிக்கடி கீழே விழுந்துவிடும் பழைய துணிகளைச் சேகரிக்கும் மும்முரத்தில், பரிமாறப்பட்ட பதார்த்தங்களைச் சரிவர ருசிக்க முடியவில்லை. அரசர் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவனுக்குப் புரிந்தது.

(தொடரும்...)

## 09.02.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1822 - ஹெயிட்டி புதிதாக அமைக்கப்பட்ட டொமினிக்கன் குடியரசை முற்றுகையிட்டது.
- 1885 - முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்தனர்.
- 1895 - வில்லியம் மோர்கன் எழுடடநலடியட்ட ஐக் கண்டுபிடித்தார்.
- 1897 - பெனின் மீது பிரித்தானியர் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1900 - இலங்கையிலும், இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1900 - டேவிஸ் கோப்பை டென்னிஸ் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1904 - போர்ட் ஆர்தர் சமர் ஆரம்பித்தது.
- 1942 - ஐக்கிய அமெரிக்காவில் பகலொளி சேமிப்பு நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1962 - பொதுநலவாய அமைப்பினுள் ஜமெய்க்கா விடுதலை பெற்றது.
- 1965 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்க தாக்குதல் படைப்பிரிவு முதற்தடவையாக தென் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டது.
- 1969 - போயிங் 747 விமானத்தின் முதற் சோதனைப் பறப்பு மேற்கொள்ளப்பட்டது.
- 1971 - கலிபோர்னியாவில் 6.4 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1971 - அப்பலோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பியது.
- 1975 - சோயூஸ் 17 விண்கலம் பூமி திரும்பியது.
- 1986 - ஹேலியின் வால்மீன் சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கிமீ தூரத்தில் வந்தது.
- 1991 - லித்துவேனியாவில் விடுதலைக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தார்கள்.
- 1996 - ஐரிஷ் குடியரசு இராணுவம் தனது 18 மாத யுத்த நிறுத்த உடன்பாட்டினை முறித்துக் கொண்ட சில மணி நேரத்தில் லண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1737 - தாமஸ் பெய்ன், ஆங்கிலேயெ-அமெரிக்க எழுத்தாளர் . (இ. 1809)
- 1773 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9வது குடியரசுத் தலைவர். (இ. 1841)
- 1873 - பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத் தந்தை. (இ. 1964)
- 1910 - ஜாக்குவஸ் மோனாட், நோபல் பரிசு பெற்ற பிஞ்சு மருத்துவர் . (இ. 1976)
- 1922 - ஜிம் லேக்கர், ஆங்கிலேயத் துடுப்பாளர். (இ. 1986)
- 1940 - ஜே. எம். கோட்ஸி, நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க எழுத்தாளர்.
- 1950 - ஆதி குமணன், மலேசிய எழுத்தாளர். (இ. 2005)
- 1964 - ம. ஆ. சுமந்திரன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி.
- 1970 - கிளென் மெக்ரா, அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்.
- 1979 - சாங் சீயீ, சீனத் திரைப்பட நடிகை.
- 1989 - சரண்யா மோகன், இந்தியத் திரைப்பட நடிகை.

### இறப்புகள்

- 1881 - பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, உருசிய புதின எழுத்தாளர் . (பி. 1821)
- 1966 - மு. செல்லையா, ஈழத்துக் கவிஞர். (பி.1906)
- 1977 - ஜி. ஜி. பொன்னம்பலம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் .(பி. 1901)
- 1987 - லூயிஸ் ஹாம்மெட், அமெரிக்க வேதியியலாளர் . (பி. 1894)
- 2001 - சாவி, எழுத்தாளர். (பி. 1916)
- 2008 - பாபா ஆம்தே, இந்திய சமூக சேவகர் .(பி. 1914)
- 2010 - செல்லையா மெற்றாஸ்மயில், ஈழத்து நாட்டுக்கூத்துக் கலைஞர்.
- 2011 - வ. விஜயபாஸ்கரன், எழுத்தாளர்.
- 2011 - எஸ். வி. ராமகிருஷ்ணன், எழுத்தாளர்.
- 2012 - ஹெப்சிபா ஜேசுதாசன், புதின எழுத்தாளர். (பி. 1925)
- 2013 - அஃப்சல் குரு, இந்தியத் தீவிரவாதி.
- 2013 - மலர் மன்னன், பத்திரிகையாளர், எழுத்தாளர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 140 | 160 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 220 | 200 | 220 |
| தக்காளி | 70 | 60 | 70 | 90 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 20 | 40 | 40 | 60 | 40 |
| கரட் | 60 | 50 | 70 | 80 | 120 | 60 |
| பூசணி | 60 | 80 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 60 | 40 | 80 | 80 | 60 | .80 |
| வாழைக்காய் | 80 | 40 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 120 | 120 | 140 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 100 | 160 | 200 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 60 | 200 | 160 | 200 | 250 |
| கருணைக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 300 | 300 | 320 | 400 | 250 | 300 |
| லீக்ஸ் | 80 | 60 | 120 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 40 | 60 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 130 | 200 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 600 | 600 | 800 | 700 |
| போஞ்சி | 80 | 40 | 120 | 120 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 120 | 140 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 40 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 200 | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 150 | 200 | 200 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 60 | 70 | 80 | 120 | 200 |
| முள்ளங்கி | 50 | 30 | 60 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 10 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | 60 | 100 | 80 | 60 |

விதை முளைவிட தொடங்கிய பிறகு மூடி இருந்த உறை தானாகக் கழன்று விடும்.

– சுவாமி சிவானந்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிழக்கில் எழுக தமிழ் எழுச்சி

நாளை 10ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பல்வேறுபட்ட பிரச்சினைகளை வெளிப்படுத்தும் பொருட்டு இவ்எழுச்சிப் பேரணி தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களை கையிலெடுத்து அதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற நினைப்பு ஆட்சியாளர்களிடம் அறவே இல்லாமல் போய் விட்டது.

தவிர, வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் எந்த விளக்கமும் விசாரணையும் இதுவரை நடைபெறவில்லை.

ஈழத்தமிழர்கள் என்றால் அவர்கள் கொல்லப்படலாம், கடத்தப்படலாம் ஏன்? காணாமல் போகவும் செய்யப்படலாம் என்ற நிலைமையே நம் நாட்டில் உள்ளது.

தமிழர்கள் என்பதால் இன்று விளக்கம், விசாரணை இன்றி சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் அவலங்கள் தீர்ந்தபாடில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினால், தமிழ் அரசியல்வாதிகள் சிறைகளுக்குச் சென்று கைதிகளைச் சந்திப்பர். உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கோரிக்கை முன்வைப்பர்.

ஆட்சியாளர்களிடம் பேசி உங்களின் விடுதலையை வலியுறுத்துவோம் என்று உத்தரவாதமும் தருவர்.

இதனை நம்பி தமிழ் அரசியல் கைதிகள் தங்களின் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுவர்.

அவ்வளவுதான் அதனோடு சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் மறக்கப்பட்டு விடுவர். இதனால் கைதிகள் மட்டுமல்ல அவர்களின் குடும்பத்தினரும் சதா கவலையும் கண்ணீருமாக காலத்தை ஓட்டுகின்றனர்.

இதேபோன்று காணாமல்போனவர்களின் விடயமும் முடிவின்றித் தொடரும். இதற்குமேலாக, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற விடயங்களும் இங்கு நோக்குதற்குரியவை.

கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் நில அபகரிப்புக்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், இராணுவ முகாம்களின் ஆதிக்கங்கள் எனப் பல்வேறு பிரச்சினைகள் கிழக்கில் உண்டு.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தக் கோரியும் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்க வலியுறுத்தியும் மட்டக்களப்பில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

இப்பேரணியின் வெற்றி என்பது மக்கள் எந்தளவுக்கு வீறுகொண்டு எழுகின்றனர் என்பதிலேயே தங்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒட்டுமொத்தத் தமிழ்மக்களும் 10ஆம் திகதி நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் ஒன்றுதிரண்டு தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் போது நிச்சயம் தமிழர்களின் விடயம் கவனத்தில் எடுக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதைவிடுத்து ஏதோ நடக்கும் என்று நாம் நினைப்போமாக இருந்தால் எங்கள் இனத்தை மெல்ல மெல்ல வேரறுத்து இந்த நாட்டின் சிறுபான்மை இனம் என்ற வகுதியில் இருந்தும் தரஇறக்கம் செய்து விடுவர்.

ஆகையால் எங்களுக்காக நாங்களே குரல் கொடுப்போம். எங்கள் பிரச்சினைகளை நாங்களே வெளிப்படுத்துவோம் எங்களுக்கு உரிமை வேண்டும் என்று எழுந்து நின்று கேட்போம்.

மக்களின் ஒன்றுபட்ட குரல் எழுக தமிழாக எழுச்சி பெறட்டும். அனைத்து பொது அமைப்புக்களும் இதற்கு உரம் கொடுக்கட்டும்.

## ஐக்கிய சனசமூக நிலைய பௌர்ணமி விழா நாளை

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையப் பௌர்ணமி விழா நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கரவெட்டியிலுள்ள ஜெயச்சந்திரன் கலையரங்கில் இடம் பெறும்.

தலைவர் சி. ஜி. திருமாலழகன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஏகாம்பரம் ரவி வர்மா கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் உள்ளூர் பாடகர்களின் திறமையை வெளிக் கொணரும் முகமாக கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் கரவை சுப்பர் சிங்கர் நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் வி. சண்முகரட்ணம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி. விஜயலட்சுமி கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (இ-12)

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் ஐயம்பிள்ளை தயானந்தராஜா தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் கணனிப் பொறியியலாளர் அரசகோன் அஜிலன் கலந்து கொள்வார். அவரது துணைவியார் வைத்தியர் கலைச்செல்வி அஜிலன் பரிசில்களை வழங்கி சிறப்பிப்பார். (இ-12)

## பன்னீர்செல்வத்தை மிரட்டியது குறித்து சி.பி.ஐ.விசாரணை நடத்த வேண்டும்

### மு.க.ஸ்டாலின் அறிக்கை

(சென்னை)

பதவி விலகும்படி ஓ. பன்னீர்செல்வத்தை மிரட்டியது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கட்டாயத்தின் பேரில் தனது பதவியை இராஜினாமா செய்ததாக கூறியுள்ள நிலையில், சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

அ.தி.மு.க.வில் உள்ள மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை மிரட்டிய சசிகலா நடராஜனும் அவரது குடும்பத்தினரும் இப்போது முதலமைச்சரையே மிரட்டி கடிதம் வாங்கியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. குறிப்பாக குடியரசு தின விழாவில் தனது மனைவியுடன் வந்து முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பங்கேற்றதை பொறுத்துக் கொள்ள முடியாத சசிகலா நடராஜன் முதலமைச்சரை மிரட்டி இராஜினாமா செய்ய வைத்துள்ளார் என்பதுதான் உண்மை. ஆனால் அந்தக் கடிதத்தை ஆளுநர் ஏற்றுக் கொண்டு விட்ட நிலையில், இன்றைக்கு மாநிலத்தில் மிகப்பெரிய நிர்வாக சீர்குலைவு ஏற்பட்டு நிலைத்த ஆட்சியின் சக்கரம் தடுமாறி நிற்கிறது.

இன்றைக்கு முதலமைச்சரையே மிரட்டியிருக்கின்ற நிலையில், இந்த மிரட்டல் குறித்தும், போயஸ் கார்டனில் அமர்ந்து கொண்டு நிலைத்த ஆட்சியை கவிழ்க்க சதி செய்த அனைவர் மீதும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் ஏற்கனவே கூறியிருந்ததை மீண்டும் வலியுறுத்துகிறேன். முதல்வரே மிரட்டப்பட்டிருப்பதால் தமிழக பொலிஸார் நடவடிக்கை எடுப்பதை விட, இது குறித்து சி.பி.ஐ. நடவடிக்கைக்கு ஆளுநர் உத்தரவிடவேண்டும்.

சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு மூன்று மாதங்கள், தேர்தலுக்குப் பிறகு அம்மையார் ஜெயலலிதாவின் உடல் நிலை பாதிப்பால் இரண்டரை மாதங்கள், அவர் மறைந்த பிறகு செயற்பட விடாத முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அரசால் இரண்டரை மாதங்கள் என்று ஏறக்குறைய எட்டு மாதங்களுக்கு மேல் தமிழக அரசு நிர்வாகம் முழுவதும் செத்து விட்டது. நிர்வாக எந்திரம் நிலைகுலைந்து கிடக்கிறது.

ஆகவே அசாதாரண சூழ்நிலை நிலவும் இந்த நேரத்தில், பொறுப்பு ஆளுநர் உடனடியாக சென்னைக்கு வந்து முகாமிட்டு, தமிழக நலனை பாதுகாக்க நிலையான ஆட்சி அமைவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, அரசியல் சட்டத்தை தமிழகத்தில் செயற்பட வைக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-12)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில இயக்கச்சி, கோவில் வயல், கொத்தாண்டார்வயல், இராணுவ முகாம் (Mechanized Infantry Brigade) இயக்கச்சி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில வெளிக்குளத்திலிருந்து குடாகச்சகொடிய வரை, கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரத்திலிருந்துபோகஸ்வேவா வரை, T.M.M கல்லுடைக்கும்ஆலை, ஆசைப்பிள்ளையார் குளம், ஓவியா விடுதி, S.V.R. அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கீர்த்தி அரிசிஆலை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை, 1ம் குறுக்குத் தெரு வவுனியா, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, வவுனியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக் கூட்டுக் கோபுரத்திலிருந்து கண்டி வீதியூடாக சற்குணபாடு வரை, மருதவுவைத்த குளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார்சின்னக் குளம், மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், குருமன்காடு, வைரவபுளியங்குளம், பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பெரியநொச்சிக்குளம் வரைக்கும், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை, வவுனியா வைத்தியசாலை, வவுனியாஇலங்கைதொலைத்தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட் சிற்றி, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்றுமுறிப்பு விமானப் படை முகாம், மண்டரின் காமெண்ட்ஸ், Gowloom காமெண்ட்ஸ் இரட்டைப் பெரியகுளம் இராணுவ முகாம், பூ-ஓயா இராணுவ முகாம், குளோப் அரிசி ஆலை, மடுக்கந்த தொலைத்தொடர்புநிலையம், குருமன்காடு UNHCR, அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு கோபுரம், செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அனைத்து எம்.எல்.ஏக்களும் எனக்கு ஆதரவு அளிக்கும் சூழல் உருவாகும்

### ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கை

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கட்சி தலைமை மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். இதனால் கட்சியின் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பின்னர் நேற்று மீண்டும் செய்தியாளர்களை சந்தித்த போது, ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான சந்தேகங்கள் குறித்து விசாரிக்க விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்றார். மேலும், சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க உள்ளதாகவும் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதற்கு பதிலடியாக அ.தி.மு.க. தலைமை கூட்டிய எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் பெருவாரியான எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர். எனினும், தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார் ஓ.பன்னீர்செல்வம்.

இந்நிலையில், தனியார் தொலைக்காட்சிக்கு ஓ.பன்னீர்செல்வம் அளித்த பேட்டியில்,

அனைத்து எம்.எல்.ஏ.க்களும் எனக்கு ஆதரவு தெரிவிக்கும் சூழல் உருவாகும். எனக்கு ஆதரவு தெரிவிக்க எம்.எல்.ஏ.க்கள் என்னுடன் பேசி வருகிறார்கள்.

ஜெயலலிதாவின் மனச்சாட்சிப்படி அனைத்து எம்.எல்.ஏ.க்களும் செயற்படுவார்கள் என நம்புகிறேன். யாருடன் இருக்கவேண்டும், யாருடன் இருக்கக்கூடாது என ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் மரணம் குறித்த மருத்துவர்களின் பதிலில் மக்களுக்கு திருப்தி இல்லை. எனவே, உண்மை தெரிய வேண்டும் என்பதற்காக விசாரணை ஆணையம் பற்றி கூறினேன். மக்களின் சந்தேகத்தைப் போக்கும் பொறுப்பில் நான் இருக்கிறேன். ஜெயலலிதாவின் கொள்கையை நிறை வேற்றும் வகையில் எனது பணி இருக்கும்.

ஜெயலலிதா என் மீது தனிப்பாசம் கொண்டவர். அதன் காரணமாக என்னை முதல்வராக ஆக்கினார். ஒருமுறை என்னிடம் பேசும் போது, நீங்களாவது விசுவாசமாக இருங்கள் என அவர் கூறியபோது எனக்கு கண்ணீர் வந்தது. கட்சிக்கு நான் 200 சதவீதம் விசுவாசமாக இருந்தேன். தற்போது, கட்சியில் விரிசல் உருவாக நான் காரணம் இல்லை. முதல்வர் பதவி பற்றி பேசி அமைச்சர்கள்தான் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். ஜெயலலிதா தனது அரசியல் வாரிசாக யாரையும் அடையாளம் காட்டவில்லை.

சசிகலா பதவியேற்புக்கு தாமதம் ஆவது பற்றி ஆளுநர்தான் பதில் தர வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் மும்பை சென்று ஆளுநரை சந்திக்கும் திட்டம் இல்லை. அவர் சென்னை வந்தால் சந்திப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

## சந்தேக நபர்களின்...

அதிபர் திணைக்கள அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் தெரிவித்துள்ளார். குறித்த மாணவியின் படுகொலை வழக்கு தொடர்பில் பன்னிரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையானது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றுவருகின்றது. இந்நிலையில் குறித்த வழக்கின் முதல் ஒன்பது சந்தேக நபர்களின் நீதிவான் நீதிமன்ற விளக்கமறியல் காலமானது ஒருவருடத்தை நிறைவு செய்திருந்தது.

இந்நிலையில் அவர்களது நீதிவான் நீதிமன்ற விளக்கமறியல் காலத்தை யாழ்.மேல் நீதிமன்றமானது ஏற்கெனவே மேலும் ஒரு வருடத்திற்கு நீடித்திருந்தது. இவ்வாறான நிலையில் அவ் ஒருவருடத்தை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தவணையிடுவதாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள்ளார். (செ-4)

## பிரதமர்-த.தே.கூ...

ற்கும் முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. விமானப்படையினர் பிடித்து வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த ஒன்பது நாட்களாக முல்லைத்தீவு கேப்பாப்பிலவை சேர்ந்த பிலவுக்குடியிருப்பு மக்கள் முகாம் முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாகவும், இராணுவம் பிடித்து வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரியும் கடந்த ஆறு நாட்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாகவும் மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் எரிக்கும் வெயிலிலும், கடும் பனியிலும் இரவு பகல் பாராது போராட்டத்தை முன்னெடுத்து வருவதால் அவர்களது உடல் நிலை வெகுவாக பாதித்து வருகின்றது.

இந்நிலையில் கேப்பாப்பிலவு மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் மேற்கொண்ட முயற்சியின் பலனாக இன்று வியாழக்கிழமை காலை பிரதமர் காரியாலயத்தில் விசேட சந்திப்பு இடம் பெறவுள்ளது. இன்று காலை 10 மணியளவில் இடம் பெறவுள்ள இச் சந்திப்பில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற குறித்த இரு கிராம மக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## வடக்கு முதலமைச்சரின்...

திற்கு எதிராக ஏவப்பட்டு வரும் இன அடக்கு முறைகளுக்கு எதிராக இப்பேரணியின் முடிவில் பிரகடனம் வெளியிடப்படவுள்ளது.

உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைப் பலியெடுத்து முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னரும் கூட தமிழின அடக்கு முறைகள் இலங்கையில் தொடர்ந்த வண்ண மேயுள்ளது.

அதேவேளை ஐ.நாவில் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்யவும் அரசு பல சதி வேலைகளை முன்னெடுத்து வருகிறது.

இலங்கையில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதாக நாடகமாடி நிரந்தரப் பிளவை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது.

எனவே சிறுபான்மை இனங்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் அரசின் செயற்பாடுகளை இல்லாமல் செய்யவும் சிங்கள பேரினவாத அரச படைகளால் இழைக்கப்பட்ட தமிழினத்திற்கு எதிராக போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு எதிராகவும் தமிழ், முஸ்லிம் என்ற வேறு பாடின்றி ஓரணியில் திரண்டு எமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதன் மூலம் உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

வடக்கில் எழுச்சிப் பேரணி ஏற்படுத்திய அரசுக்கு எதிரான அலையைப் போன்று கிழக்கிலிருந்து பேரினவாத அரசுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் வர்த்தக சங்கங்கள் ஆதரவளித்துள்ள அதே வேளை பேரணியில் அணி திரளுமாறும் அழைப்பு விடுத்துள்ளன.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை உலகறியச் செய்யும் ஒரே நோக்குடன் நடத்தப்படுவதால் மாணவர்கள் மற்றும் கல்விப்புலம் சார்ந்தோர் எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவளித்து பங்கேற்பதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கேப்பாப்பிலவு போராட்ட...

தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பகுதி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 9ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்திருந்த குறித்த போராடத்திற்கு பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த போராட்டத்திற்கு சிங்கள மக்களும் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினர் , பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சட்டத்தரணி சம்பத் புஸ்பகுமார மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாந்து ஆகியோர் தமது ஆதரவை பகிரங்கமாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தென்னிலங்கையில் உள்ள மக்களும் இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, இனிவரும் காலத்தில் இணைந்து கொள்வார்கள் எனவும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

மேலும், கேப்பாப்பிலவு மக்கள் முன்னெடுத்துள்ள இந்த போராட்டம் நியாயமானது எனவும். எனவே, இவர்களின் காணிகளை விரைவில் விடுவிக்க வேண்டும் எனவும் கோரி தாமும போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-281,15)

## காணாமல் போனோர்...

அமைச்சரும், அமைச்சரவை இணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட கயந்த கருணாதிலக, 2016ஆம் ஆண்டு 14ஆம் இலக்க காணாமல்போனோர் தொடர்பான காரியாலயத்தை அமைப்பதற்கான சட்டமானது நாடாளுமன்றத்தில் 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி அனுமதி கிடைத்தது.

குறித்த காரியாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணியினை நிறைவேற்றுவதற்காக வேண்டி ஏதேனும் நபர் ஒருவரோ அல்லது அமைப்புடனோ ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பில் குறித்த காரியாலயத்திற்கு இருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சட்டத்தின் 11 பிரிவின் (அ) உறுப்புரையினை அகற்றுவதற்கு ஜே.வி.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க முன்வைத்த யோசனைக்கு அமையவே திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார். (செ-11)

## அடையாளம் காட்டி...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி 9ஆவது நாளாக நேற்றும் நிலமீட்பு போராட்டத்தை தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த இராணுவ ஊடகப் பேச்சாளரிடம் ஊடகவியலாளர்கள் இதுகுறித்து வினா எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த இராணுவப் பேச்சாளர் கேப்பாப்பிலவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு, அவரவர் காணிகளை அடையாளம் காட்டி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நாம் ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ளோம். அவ்வாறு செய்யாது காணிகளை விடுவிக்க முடியாது. இங்கு சம்பந்தமில்லாதவர்களும் இருக்கலாம். கடந்த காலங்களில் இந்த பகுதியில் 243 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. அத்துடன் வவுனியாவிலும் 16 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மேலும் காணிகளையும் எம்மால் விடுவிக்க முடியும். அதற்காக மக்கள் தமது காணிகளை அடையாளம் காட்டி உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தும் பட்சத்தில் தான் பிரதேச செயலாளர் ஊடாக விமானப் படையினரால் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க முடியுமாக இருக்கும். முகாம் அமைந்துள்ள காணிப்பகுதியில் அரசுக்கு சொந்தமான காணியும் உள்ளது. வனப் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கீழான காணியும் உள்ளது. இதனால் மக்கள் தமது காணியின் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் மக்களுக்கும் அறிவித்தும், தொடர்ந்தும் போராடுகிறார்கள் எனில் அதன் பின்னணியில் வேறு நோக்கங்கள் இருக்கலாம் எனும் சந்தேகமும் எழுகின்றது என பிரிகேடியர் ரொஷான் தெரிவித்தார். (செ-11)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை மகேசன்

கரணவாய் மேற்கு, சோளங்கனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகேசன் அவர்கள் 07.02.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்ற தவமணியின் பாசமிகு கணவரும், காலம்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலம்சென்ற நடேசு செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், யோகரத்தினம் (சுவிஸ்), தேவரத்தினம் (சுவிஸ்), ஸ்ரீஸ்காந்தராசா (இலங்கை), தர்மரத்தினம் (ராசன் - லண்டன்) செல்வராணி (தேவி - இலங்கை), கமலாம்பாள் (கனடா), செல்வராசா (இலங்கை), ஜெயராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோராதா, ஜெயவதனா, ஜெயலலிதா, ஜெயமலர், பாலசுப்பிரமணியம், கனகலிங்கம், கவிதா, கயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகிதா, அபி, அருண், சசீனா, சர்வி, கோபு, ஜெனி, ஜெனா, ராஜ், தீபன், சாருஜன், குயித்தா, பானுமதி, சங்கீத், சுயானா, ஆர்த்தி, கபீனன், லக்ஸி, காயா, சானு, காயத்திரி, மதுஷன், சஞ்சய் ஆகியோரின் பாசமிகு பேரனும், அட்சயா, ஆதீஸ், தேவி, நிரோஸ், தியாஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 10.02.2017 வெள்ளிக்கிழமை, முப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவரசம்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**


தொடர்பு இல :

யோகரத்தினம் (சுவிஸ்) 0041783040778, தேவரத்தினம் (சுவிஸ்) 0041717401930, தர்மரத்தினம் (லண்டன்) 004479509169953, ஸ்ரீஸ்காந்தராசா (இலங்கை) 0094775846825, செல்வராசா (இலங்கை) 0094776669405, ஜெயராசா (கனடா) 0016473438621, கமலாம்பாள் (கனடா) 0016473438642, செல்வராணி (இலங்கை) 0212056267

(C - 7503)

# மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 04 . 1934



இறப்பு 08 . 02 . 2017

## திருமதி தங்கம்மா அப்பையா

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் யாழ் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட **திருமதி தங்கம்மா அப்பையா** 08.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற நாகலிங்கம் - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் அப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிறிகரன் மற்றும் நகுலேஸ்வரன் (நியூ நகுலா ஜுவல்லறி, நியூ லலிதாஸ் ஜுவல்லறி), புலேந்திரன் (சுவிஸ்), செல்வராணி, பாஸ்கரன் (ஜேர்மனி), உதயராணி (ஜேர்மனி), தயாபரன் (உதயா ஜுவலர்ஸ், நியூ உதயா ஜுவல்லறி), இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, பொன்னுத்துரை, சதாசிவம் மற்றும் இராசம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசாத்தியம்மா, மைதிலி, ஸ்ரீமலர், தேவகுமார், ஜெயந்தி, அருள்ஜோதி, உமாதேவி, நடேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சின்னம்மா, பேரம்பலம், இரத்தினசபாபதி, நாகலட்சுமி, அழகம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதீபா - வர்ணகுலசீலன், பிரசாந் - நிஷாந்தினி, பிரதாபன், பிரகீதா - திவாகர், கௌசனா - கிரிதாஸ் (நியூ லலிதா ஜுவல்லறி), லலிதாஜினி, சுவேதினி, சிவசுஜன், சிவயுதன் (சுவிஸ்), கார்த்திகை தீபன், கார்மேகன், கார்மோகன், திவ்வியன், கார்த்திகா (ஜேர்மனி), நிரோஷன், நிவேதன், தயானி (ஜேர்மனி), லதுஷன், சமிக்ஷா, தனுஷ்காந், கிரிஷா, வக்ஷலா, கம்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சரண்யா யனுஷன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்கும்பான் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**159/2, பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(9504)

**நகுலேஸ் - 0777125762, தயா - 0774440172**

# ஆட்டோ விபத்து; மூவர் படுகாயம்



(கரணவாய்)

திக்கம் மதவடிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி ஒன்று கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மூவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நெடியகாடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களான செல்வக்குமார் செல்வக்குமரன் (வயது28), விக்னேஸ்வரன் சுகந்தன் (வயது 34), இராஜகுமார் தங்கேஸ்வரி (வயது28) ஆகிய மூவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-60)

## ஆட்டோ கோர...

இதன்போது பின்னால் வந்த முச்சக்கர வண்டி, வான் திரும்பும் வரையில் வீதியில் தரிந்து நின்றுள்ளது. அதன்போது முச்சக்கர வண்டிக்கு பின்னால் மிக வேகமாக வந்த கப்ரக வாகனம் தரித்து நின்ற முச்சக்கர வண்டியில் மோதியுள்ளது.

சடுதியாக கப்ரக வாகனம் மோதியதில் நிலைத்தடுமாறிய முச்சக்கர வண்டி முன்னால இருந்த வானுடன் மோதியதில் கோர விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது முச்சக்கர வண்டியினுள் இருந்த கர்ப்பிணி பெண் உட்பட மூவர் சிறிய காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். விபத்து சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-11)

## இளைஞர் மீது...

இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலோலி தெற்கைச் சேர்ந்த மனோகரன் பத்மநாதன் (வயது30) என்பவரே காயங்களுக்குள்ளானார்.

இரவு வீதியில் சென்றுகொண்டிருந்த போது அவரை வழிமறித்த மூவர் கொண்ட குழுவினரில் இருவர் வயரினால் தாக்க மற்றையவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் கழுத்துப் பகுதியில் வெட்டியதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## சாட்சியை அச்...

நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் ஊர்காவற்றுறையில் வீட்டில் தனித்திருந்த ஏழுமாத கர்ப்பிணி பெண் இனந்தெரியாதோரால் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்து நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இக் கொலை சம்பவத்தை நேரில் கண்டதாக கூறப்படுகின்ற மாற்றுத்திறனாளியான சிறுவனுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட வழக்கானது விசாரணைக்காக நேற்றைய தினமும் மீண்டும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போதே நீதிவான் ஏ.எம்.எம்.றியால் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்திருந்தார். இந்நிலையில் நேற்றைய வழக்கு விசாரணையின் போது, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரால் குறித்த சாட்சியான சிறுவனுக்கு அச்சுறுத்தல் உள்ளமை தொடர்பாக தமக்கு கிடைக்கப்பட்ட தகவலுக்கு அமைய அது தொடர்பான அறிக்கையை மன்றில் சமர்ப்பித்திருந்தார். அத்துடன் குறித்த கண்கண்ட சாட்சியான மாற்றுத்திறனாளியான சிறுவனது சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி சுகாஸ் இது தொடர்பான விண்ணப்பம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்து இவ் வழக்கு விசாரணை தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரால் குறித்த சிறுவனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக மன்றுக்கு தெரியப்படுத்தி இருந்த நிலையில் அது தொடர்பில் மன்றானது கவனம் செலுத்துகின்றது என தெரிவித்த நீதிவான் இது தொடர்பில் பின்வரும் உத்தரவுகளை பிறப்பித்திருந்தார்.

இதன்படி குறித்த அச்சுறுத்தல் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு முறைப்பாடு எதும் கிடைக்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக விசாரணைகள் எதேனும் நடத்தப்பட்டதா? இல்லையா? என்பது தொடர்பாக தனியான அறிக்கையொன்றை ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பரிசோதகர் மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

குறித்த அச்சுறுத்தல் விடுத்த நபரை குறித்த கண்கண்ட சாட்சியமான சிறுவன் பெயரினாலோ, திட்டமிட்ட அடையாளங்கள் ஊடாகவோ கூறமுடியாத நிலையில், குறித்த சிறுவனது மொழியினை அறிந்துகொள்ள கூடிய நிபுணத்துவம் வாய்ந்த நபர்கள் வரவழைக்கப்பட்டு குறித்த சிறுவனால் வழங்கப்படுகின்ற தகவல்களுக்கு அமைய குறித்த அச்சுறுத்தல் விடுத்த நபரது உருவப்படமானது வரையப்பட்டு அதனூடாக அவர் கைது செய்யப்பட்டு சாட்சிகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தனியான ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் மன்றானது ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பரிசோதகருக்கு உத்தரவிடுகின்றது என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகருக்கு உத்தரவிடுவதாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

வெளிவந்து விட்டது
ஆசிரியர் திரு.அ.ஸ்ரீகரன் SLEAS III
அவர்களின் விரைவாக செய்வோம்
விரைவு கணிதம் தரம் 4
பயிற்சி நூல்
தொடர்புகளுக்கு:-0774349105
(கி-7490)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

மக்களின் நன்மதிப்பை பெற்ற
உலக நாடுகளில் முதன்மை நாமமான
20% OFF
BLACK+DECKER DEWALT Ohms STANLEY
PowerTools மற்றும் வீட்டு இலத்திரனியல் உபகரணங்கள்
மீண்டும் யாழ் மக்களுக்காக 20% விசேட விலைக்கழிவுடன்
KINGS ELECTRONICS(PVT) LTD
வடமாகாண ஏகவினையோகத்தர்
NO.12, POINT PEDRO ROAD, JAFFNA. | WEB: MYKINGS.LK Tel: 0214546699
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
10.02.2017 தொடக்கம் 17.02.2017 வரை பெற்றுக்கொள்ளலாம்
150 வருடத்திற்கு மேலான நம்பிக்கை வாய்ந்த Delmage கம்பனியிடம் இருந்து




மேலும்
நந்தலாலா ஹாட்வெயர்
No.29 Stanly வீதி யாழ்ப்பாணம்.
ஜெசீமாஸ்
K.K.Sவீதி யாழ்ப்பாணம்.
ARK Enterprises
Stanly வீதி யாழ்ப்பாணம்.
தில்லயம்பதி மோட்டர்ஸ்
Stanly வீதி யாழ்ப்பாணம்.
லிங்கம் & Co
No.48 Stanly வீதி யாழ்ப்பாணம்.
நாராயணா ஹாட்வெயர்
Stanly வீதி யாழ்ப்பாணம்.
கஜமுகன் ஹாட்வெயர்
Stanly வீதி யாழ்ப்பாணம்.
ஒரே கூரையின் கீழ் இவ் உபகரணங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் பழுது பார்க்கும் வசதிகள் உண்டு
ஆகிய இடங்களிலும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் 20% விலை கழிவுடன் பெற்று கொள்ளலாம்
Delmege Forsyth & Co. Ltd
101 Vinayalankara Mawatha, Colombo 10
(கி-7495)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.